கடவுள் துணை

MADRAS.

செந்தமிழ்.

தொகுதி-கூ]　　கிலக ௵ வைகாசி ௴　　[பகுதி-எ.

"ஆழிவடிம்பலம்ப நின்றானும்" என்னும்

நளவெண்பாப்பாட்டுரை.

ஆழி வடிம்பலம்ப நின்றானு மன்றேநகா
லேழிசைநூற் சங்கத் திருந்தானும்—நீள்விசும்பில்
நற்றேவர் தூது நடந்தானும் பாரதப்போர்
செற்றானுங் கண்டாயிச் சேய்.

இவ்வெண்பா, புகழேந்தியார்பாடிய நளவெண்பாவிலே சுயம்வர காண்டத்து கஙஎ-ம் பாடலாகும். தமயந்தியின் சுயம்வரகாலத்தில், சேடியர் பற்பலதேசத்தரசரது விசேடங்களை அவளுக்கு அறிவித் துக் காட்டுமிடத்துள்ள அழகிய வெண்பாக்களிலே இது நான்கா வது. இதற்கு முன்னுள்ள மூன்று வெண்பாக்கள் அடியில்வருவன.

"பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவுந் திருநாடன்—பொன்னிற்
சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரிற் றன்னோர்
கணங்கவிழ்ந்த வேலனிவன் காண்."

"போர்வாய் வடிவேலாற் போழப் படாதோருஞ்
சூர்வாய் மதாரிக்கட் டோகாய்கேள்—பார்வாய்ப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டாற்
றிரித்தகோ இங்கிருந்த சேய்."

"வென்றி நிலமடந்தை மென்முலைமேல் வெண்டுகில்போற்
குன்றருவி பாயுங் குடநாடன்—நின்றபுகழ்
மாதே யிவன்கண்டாய் மானத் தனிக்கொடியின்
மீதே சிலையுயர்த்த வேந்து."

இவ்வெண்பாக்களிலே "பொன்னனி......திருநாடன்" "மால் வரையைச் சென்டாற் றிரித்தகோ" "தனிக்கொடியின்மீதே சிலை யுயர்த்த வேந்து" என்னுந்தொடர்கள் வருதலால், இவை முறை யே, சோழபாண்டியசேரர்களைப்பற்றிக் கூறியவை என்று எளிதிற் றேன்றக்கூடும். இவ்வாறுனல், இப்பாடல்களுக்கடுத்து வருவதும், இப்போது ஆராய்ச்சிக் கெடுத்துக்கொண்டதுமான "ஆழி வடிம்பலம்ப" என்றபாட்டுத் தமிழ்நாட்டானல்லாத வேற்றரசனெருவன் வரலாற்றைக் கூறவந்ததாகக் கொள்ளல்வேண்டும். அங்ஙனங்கொண்டே, அறிஞர்சிலர் உரையிட்டிருக்கின்றனர். அவர்கள் இப்பாடல் யதுவமிசத் தரசனைப்பற்றியதென்றும், இதிற்கூறப்படுங் கதை நான்கில், முதலிரண்டும் கடையிரண்டும், முறையே, அவ்வமிசத்துதித்த கார்த்தவீரியார்ச்சுனனையும், கண்ணபிரானையும் குறிப்பவையென்றும், சுருக்கமாகக் கதைகளைக்கூறி, உரையிட்டிருக்கிறூர்கள் அப்பொருள் ஒருவாறு பொருத்தம்பெறினும் அவர்கள்தாம் காட்டிய கதைகட்கு ஏற்றபிரமாணங்களை விளக்காததாலும் வேறு சில காரணங்களாலும் அதிற்சந்தேகமுண்டாகின்றன. அதனல் இவ்வெண்பாவுக்குத் தீர்ந்தவுரை இதுதான் என்று துணியக்கூடவில்லை. இத்தகையபாடலை இங்கு ஆராய்ச்சிக் கெடுத்துக்கொண்டது, பின்னுங் குழப்பத்துக்குக் காரணமாகக்கூடுமாயினும், அதுபற்றி அறிந்தவுண்மைகளை மறைத்தல் குற்றமாதலால் இப்பாடல் விஷயமாக யான்கண்ட சிலவிசேடங்களை வெளியிடத்துணிந்தேன்.

முதலிலுள்ள "ஆழிவடிம்பலம்ப நின்றூன்" என்ற தொடரை ஏனையரசர்க்கு எவ்வாறு இயைத்துக்கொள்ளினும், பாண்டியனெருவனுக்கே அஃதோரியற்பெயர்போலத் தமிழ்நூல்களில் மிகுதியாக வழங்கக் காண்கின்றேம். புறநானூறு, கூ-ம் பாடலின் விசேடவுரையிலும், வில்லிபாரதம் பதினேந்தாம் போர்ச்சருக்கம், கஅ-ம் கவியிலும்,வேம்பத்தூரார் திருவிளையாடலில்,உக-ம் படலத்து, கூ-ம் கவியிலும் மதுரைக்காஞ்சி யுரையிலும் அது பயிறல் காண்க. இவ்வாறு பாண்டியனது பிரபலமான சிறப்புப்பெயரை முதலாகக் கொண்டு இவ்வெண்பாத் தொடங்குதலால், இஃது அவ்வரசன் பெருமையே கூறவந்ததென்று அறிஞர்க்கு முதலிற்றேன்றுமென்பது திண்ணம். இத்தோற்றம் மெய்தானு என்பதையறியவேண்டி

இவ்வெண்பாவில் வரும் ஏனைவரலாறுகளை ஆராய்ந்ததில் அவையும் பாண்டியனுடையன வென்பதற்கேற்ற பிரமாணங்கள் சில கிடைத்தன. அவற்றை ஒவ்வொன்றாய்க் கூறுவேன்.

முதல் வரலாறான "ஆழி வடிம்பலம்பநின்ற" கதைவிரிவைப் பழைய தமிழ் நூல்களினின்று இப்போது காட்டக்கூடவில்லையேனும், மதுரை மான்மியங்களாகிய வேம்பத்தூரார் திருவிளையாடலினும், பரஞ்சோதியார் திருவிளையாடலினும் அடியில்வருமாறு கூறப்பட்டுளது. ஒருகாலத்தில், பழமதுரையை நோக்கிப் பெருங்கடல் பொங்கியழிக்கப்போதலைப் பாண்டியன் கனவில் ஆலவாயடிகள் முன்னதாகக்கூறி, அக்கடல்வலியை ஒரு வேலையெறிந்து அடக்கும்படி அருளிச்செய்து மறைய, பாண்டியன் துயிலுணர்ந்ததும் அவ்வாறே கடல் பொங்கியழிக்கவருதலையறிந்து சினந்து, தன் கைவேலை எறிதலும் அக்கடலுந் தன் ஆரவாரமடங்கி அவன் கால் விளிம்பை அலம்பிப் பணிவுடன் சென்றது"—என்பது. இவ்வரலாறு, அப்புராணத்துக் கடல்சுவற வேலெறிந்த திருவிளையாடலிற் கண்டுகொள்க. "வடிம்பலம்ப" என்பதற்கு, (ஆயுதத்தின்) விளிம்பையலம்ப என்று அப்புராணங்கூறாது, "பாண்டியன் கால் விளிம்பையலம்ப" என்றே கூறுகிறது. இதற்கேற்ப முன்னூல்களில் வருந்தொடர்களிலும் ஆயுத விளிம்பு என்பதற்கு ஆதாரங் காணப்பட்டிலது. இவற்றால், வடிம்பலம்ப நின்ற கதை, பாண்டியனதேயாதல் காண்க.

இரண்டாம் வரலாறாகிய "அன்றொருகால்—எழிசைநூற் சங்கத்திருந்தானும்" என்பதனைத் தனியேவிளக்கிக்காட்டும் மேற்கோள் இப்போது கிடைத்திலதாயினும், பாண்டிநாட்டில், இயற்சங்கமொன்றிருந்ததுபோல இசைச்சங்கமொன்றும் இருந்ததென்பதனை முன்னூல்கள் குறிப்பிக்கின்றன. திருச்சிற்றம்பலக்கோவையாரில், தலைவனைநோக்கி "நின்னுடைய தோள்கள் மெலிந்து நீ இவ்வாறாதற்குக் காரணமென்னோ" என்று பாங்கன் முந்துற்று வினவுமிடத்து,

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலினாய்ந்தவொண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச்சூழல்புக்கோ
இறைவா தடவரைத்தோட் கென்கொலாம் புகுந்தெய்தியதே"

... எனவருகின்ற பாடல் இங்கே கவனிக்கற்பாலது. இதிற் பாங்கன் வினவும்போது, சிவபிரானது "உயர்ந்த மதிலையுடைய கூடலின்கணாய்ந்த தமிழின் றுறைகளிடத்து நுழைந்தனையோ? அன்றி, ஏழிசையினது சூழலின்கட் புகுதலானோ, இறைவனே! பெரியவரை போலும் நின்தோள்கட்கு மெலிவுபுகுந்தெய்தியது என்னே? என்று கூறப்பட்டுள்ளது. இங்கே, தலைவனது தோண்மெலிவுக்கு "தீந்தமிழின் றுறைவாய் நுழைதலும் ஏழிசைச்சூழல் புகுதலும் காரணமாகக் கூறுதலின்ன்று, இயற்சங்கத்தோடு இசைச்சங்கமொன்றும் முற்காலத்திருந்ததென்பது புலப்படுகின்றதன்றே. இக்கோவையில், "துறைவாய் நுழைந்தோ—ஏழிசைச்சூழல் புக்கோ" என்னும் வினைகளால் அத்துறையுஞ் சூழலும்—சங்கமென்பது பெறப்படலோடு, "கூடலினாய்ந்த" என்னுந்தொடர், தமிழின் றுறைக்கும் ஏழிசைச்சூழலுக்குந் தனித்தனி செல்லற்குரிய பொதுவிசேடண மென்பதும் தெரியவருதல் காண்க. இவ்வாறு, இசைச்சங்கமொன்றிருந்ததை வாதவூரடிகள் அறிந்திராராயின், இறையனார்களவியலில், இதேதுறையில் வரும் மேற்கோட்செய்யுளான,

> "வண்டுறை வார்பொழில் சூழ்நறை யாற்றுமன் றேடவைவேல்
> கொண்டுறை நீக்கிய தென்னவன் கூடற் கொழுந்தமிழின்
> ஒண்டுறை மேலுள்ள மோடிய தோவன்றி யுற்றதுண்டே
> தண்டுறைவா சிந்தைவாடிட வென்னீ தளர்கின்றதே."

என்னும் பாடல்போல "அன்றியுற்ற துண்டே" என வாளா கூறிவிடுவரன்றே. அவ்வாறன்றி, ஒருபுதுச்செய்தியை அறிவிப்பவர்போல "அன்றி ஏழிசைச்சூழல் புக்கோ" என இயற்சங்கத்துடன் இசைச்சூழலைச்சேர்த்துக் கூறுதலால், அது நளவெண்பாவில்வரும் "ஏழிசைநூற் சங்கத்திருந்தானும்" என்பதன் உண்மையை நன்குவிளக்குவதென்றே துணியலாம். தமிழ்மொழியில், இசைநுணுக்கம் இந்திரகாளியம் பஞ்சமரபு பரதசேனாபதீயம் செயிற்றிய முதலாக எண்ணிறந்தபழைய இசைநூல்களெல்லாம், இயற்சங்கத்துதித்தன என்பதினும், "ஏழிசைச்சங்கத்" திருந்து எழுந்தன என்பது பொருத்தமாகவும் தோற்றுகிறது. இவற்றால், "ஏழிசைநூற் சங்கத் திருந்தானும்" என்னும் வரலாறும் பாண்டியனுக்கேற்புடைத்தாகவே தோற்றுகிறது.

இனி, மூன்றும்; வரலாறு, "நீள்விசும்பில், நற்றேவர் தூது நடந்தானும்" என்பது. இது, பாண்டியன் சரிதமேயாமென்பதற்குத் தக்கபிரமாணங்கூறலாம். இறையனார்களவியலில், "ஓதல் காவல்" என்னும் ௩௬-ம் சூத்திரவுரையில், "அல்லதூஉம், தேவரும் அசுரரும் அமர்செய்த காலத்து, தேவர்களையும் அசுரர்களையும் ஒருவிர் ஒருவிர்மிக்காரை ஒறுப்பல் யான் எனப் பாண்டியன் மாகீர்த்தி சந்துசெய்வித்தது போல, இருவரின் மிக்குச்செய்தீரை ஒறுப்பலென்று சந்துசெய்வித்தலுமொன்று, இருவரையும் ஒறுக்குந்துணை ஆற்றலுடையனாகலானென்பது" எனவரும் வாக்கியம் இங்கே கவனித்தற்குரியது. இதனுட்கூறிய, பாண்டியன் மாகீர்த்தி என்பவன் தலைச்சங்கத்துக் கவியரங்கேறிய பாண்டியருள் ஒருவனென்பது, வேனிற்காதை முதற்கண் அடியார்க்குநல்லார் எழுதிய உரையான் உணர்க. இப்பாண்டியனே தொல்காப்பியம் புலப்படுத்தியவனென்பர். இவன் தேவாசுரயுத்தத்தை தீர்க்கும்பொருட்டுத் தூதுசென்றான் எனவே, அவ்யுத்தம் "நீள்விசும்பில்" நிகழ்ந்ததென்பதும், தேவர்க்கனுகூலமாகவே சென்றானென்பதும் உய்த்துணரப்படும். இவ்வாறு, பழைய நூலாகிய இறையனார்களவியலுரை சுருக்கமாகக் கூறுதலினின்று, "நற்றேவர் தூதுநடந்த" வரலாறு, பாண்டியனதேயாதல் கண்டுகொள்க.

இனி நான்காம் வரலாறு "பாரதப்போர் செற்றானும்" என்பது. இக்கதையை, பாரதத்தால் நாம் எளிதிலறியக்கூடும். மகாபாரதப்போரில், தமிழ் வேந்தராகிய சேரசோழ பாண்டியர் மூவரும் பாண்டவர்க்கு வேண்டிய உதவி செய்தனரென்பது, தமிழ் நூல்களில் மட்டு மன்றி, வடமொழிப் பாரதத்தும் கண்டது. இவருள் சேரனுஞ் சோழனும், பாரதப்போரில் முனைந்து நின்றதோடு, அச்சேனைகட்கு உணவளிக்கும் பெருங்கருமமும் பூண்டவர்களென்று தமிழ் நூல்கள் கூறும். * பாண்டியன், பாண்டவர் சகாயனாய் அப்பெரும்போரில் கொடுஞ்சமர் புரிந்த வரலாறு வில்லிபாரதம் ௧௬-ம் போர்ச்சருக்கத்தும், பதினேழாம் போர்ச்சருக்கத்து ௬0எ ஆம் பாடல்முதல் ௧௧௬-ஆம் பாடல்வரையும்கூறப்படுதலால் அறிய

* சிலப்பதிகாரம், வாழ்த்துக்காதை, "ஓரைவர்"என்னும்பாட்டும்; கட்டுரை காதை, ௫௫-ஆம் வரியும், முறையே, இவ்வரலாறு குறித்தல் காண்க.

லாம். பாண்டவர் பாரதப்போர்வென்றதற்குப் பெருந்துணையானவனுதலால், பாண்டியனையே அப்போர்செற்றானென் றுபசரித்தார். இங்ஙனம் போர்புரிந்த பாண்டியனை, வில்லிபுத்தூரர், "கடல் விளிம்பலம்பநின்ற கைதவன்" என்பர். (க௫-ஆம் போர்ச்சருக்கம். பா-கஅ) அருச்சுனன் மணந்த சித்திராங்கதையின் தந்தையான பாண்டியனை "மகோததிவணங்குந்தாளான்" என்று முன்பும் அவர் கூறியிருத்தல் காண்க. இதனால் நளவெண்பாவிலே வரும் "ஆழிவடிம்பலம்ப நின்றானும்......பாரதப்போர் செற்றானும்" என்னும்வெண்பாவின் முதலுமீறுமுள்ள வரலாறுகள் அரசனொருவன் சரித்திரமென்பதும் புலப்படும்.

இவ்வாறு, இவ்வெண்பாவிற் கண்ட வரலாறுகள் நான்கும் பாண்டியனுடையனவென்று பிரமாணவாயிலாகத் தெரிதலால், இப்பாட்டு வேற்றரசனொருவனைப் பற்றியதென்று கொள்ளவேண்டியதில்லை. ஆயின், முதலிற்குறித்த மூன்று வெண்பாக்களிலே, இடைநின்ற பாட்டில், "பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டாற், றிரித்தகோ இங்கிருந்த சேய்" எனப் பாண்டியனைக் கூறிவிட்டமையால், அங்ஙனம் பாண்டியனையும் அடுத்துச்சேரனையுங் குறித்தவர் மறுபடியும் பாண்டியனைப் புகழ்ந்தாரென்றல், முறைப்பிறழ்வும் கூறியதுகூறலுமாகாதோ எனின்;—அற்றன்று. மேற்காட்டிய வெண்பாக்களிலே, "பொன்னியமுத" "போர்வாய்" என்றவிரண்டும் சோழனையும், "வென்றி நிலமடந்தை" என்பது சேரனையும் குறித்ததெனக்கொண்டு, இம்மூன்றுக்கும் அடுத்த "ஆழிவடிம்பலம்ப" என்னும் வெண்பாவைப் பாண்டியனதாக்கலே ஈண்டைக்கு இயைபுடையதென்க.

இவ்வாறாயின், சோழனைப்பற்றியதாகக் கூறிய "போர்வாய்" என்னும் வெண்பாவில், "பருத்ததோர் மால்வரையைப் பண்டொருகாற் செண்டாற், றிரித்தகோ இங்கிருந்த சேய்" எனப், பாண்டியனது மேருவைச் செண்டாலடித்த கதையைச் சோழனதாகக் கொண்டது பொருந்தாதெனின்; கூறுவேன்: அக்கதை, பாண்டியனுக்கு வழங்குவதுபோலவே சோழனுக்கும் பெருவழக்காக உள்ளதாம். என்னை? கரிகாற்சோழன் என்பான், உலகமுழுதுந் தன்னடிப்படுத்து வரும்போது, இமயமலை "தன்னொடு எதிர்த்து விலக்

குதலின் அதனைப் புறங்காண்டற்கும், அதன் வடபாலும் தனதாணை சேறற்கும் சாத்தனதருளால் தான்பெற்ற செண்டினாலே அதனை அடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தா" னென்பது கதையாதல் காண்க. இதனை—

"கச்சி வளைக்கச்சிக் காமக்கோட் டங்காவன்
மெச்சி யினிதிருக்கு மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
செம்பொற் கிரிதிரித்த செண்டு."

என்னும் பழம் பாடலாலும்,

"செண்டு கொண்டுகரி காலனொரு காலி மயச்
சிமய மால்வரை திரித்தருளி மீள வதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய்புலிப்பொறி பொறித்தது மறித்த பொழுதே."

என்னும் கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியப்பாடலாலும் உணர்க. இவ்வரலாற்றை, சிலப்பதிகாரம், இந்திரவிழவூரெடுத்த காதையில்,

"அசைவி லூக்கத்து நசைபிறக் கொழியப்
பகைவிலக் கியதிப் பயங்கெழு மலையென
இமயவ ருறையுஞ் சிமயப் பிடர்த்தலைக்
கொடுவரி யேற்றிக் கொள்கையிற் பெயர்வோற்கு." (அடி. ௯௰-௯௮.)

என்பதனுரையிலே அடியார்க்கு நல்லார் விளக்கியிருத்தல் கண்டு கொள்க.

இனி, ஏனையரசர்க்கெல்லாம் ஒவ்வொருகவியே கூறிச் சோழனுக்குமட்டும் இரண்டுகவி கூறுவரோ எனின்:— இந்நூலாசிரியர், சோழனது வாயிற்பெரும்புலவரும் அவனாற் பெரிதும் அருமை பாராட்டப்பட்டவருமாதலால், அவ்வபிமானம்பற்றிச் சோழன்குலப்பெருமையை ஏனையரினும் சிறப்பிக்க வேண்டி, இங்ஙனங் கூறினரென்றே கொள்ளத்தக்கதாம். பிறவுயர்ந்த அரசரிருக்கவும் அவர்களைப்பிற்படவும் தமிழ்மூவேந்தரை முற்படவும் வைத்துக் கூறுதலால் புகழேந்தியின் தேசாபிமானம் புலப்படுவதோடு, அம்மூவேந்தருள்ளும், "சேர சோழ பாண்டியர்" அல்லது "சேரபாண்

டியசோழர்” என்னுந் தமிழ்வழக்குப்படி, சேரனை முதலில்வைக்காது சோழனை முதலில் வைத்துப்பெருமைப்படுத்தலால் அவரது இராஜாபிமானமும் நன்கு வெளியாதலால், அவ்வபிமான மிகுதியானே சோழனை இரண்டு பாடலாற் குறித்தாரென்பது பொருத்தமாமாறு கண்டுகொள்க. “சேரபாண்டியசோழர்” என்பதும் முன்னூல்வழக்காதல், செந்தமிழ்,௨-ஆம் தொகுதி, ௧௧௧-ஆம் பக்கத்துக் காண்க.

இவ்வாறு, நளவெண்பாச் சுயம்வரகாண்டத்துவரும் ௧௩௪, ௧௩௫, ௧௩௬, ௧௩௭-ம் பாடல்களிலே, முதலிரண்டும் சோழர்க்கும், ௧௩௬-வது சேரனுக்கும், ௧௩௭-வது பாண்டியனுக்கு முரியனவாகக் கொண்டு பொருள்காணாது போயின், இப்பாட்டுக்கு வலிந்தேபொருள் கொள்ளவேண்டி நேரும். பிறர்எழுதிய உரைப்படி, இப்பாட்டு யதுவமிசத்தரசனைக் குறித்ததென்பதும், “அக்குலத்தில் கீர்த்திமானன கார்த்தவீரியார்ச்சுனனென்போன், நருமதாநதி சங்கமத்தண்டையில் இராவணனை மீட்கும்படிவந்த இராக்ஷதரைக்கொன்று கடலில் ஆயுதங்கழுவினு” னென்றுள்ள புராணகதையொன்றை உட்கொண்டு “ஆழ்வடிம்பலம்ப நின்றானும்” என்று கூறப்பட்டதென்பது முண்மையாயின், அக்கதையை நன்குவிரிக்குமிடமாகிய இராமாயண உத்தரகாண்டத்தே கார்த்தவீரியார்ச்சுனப் படலத்து, அவ்வரலாறு காணப்படாததென்னை? அஃதொழியினும்,விஷ்ணுமச்சமுதலிய முக்கிய புராணங்களில், அவ்வர்ச்சுனன் மகிமையைத் தனியே யுரைக்கின்ற விடத்தேனும், அவன் கடலில் ஆயுதங்கழுவிய கதை காணப்படலாமன்றோ. இவற்றுள், மச்சபுராணத்தில், அவனது கதைக்கூறுகளிலே, அவன் சமுத்திரத்தைக் கலக்கி ஆன்மகோடிகளை வருத்தினனென்பதுமட்டுங் காணப்படுகிறது. இனி நாரத முனிவருக்கும் விசுவாவசு என்னுங் கந்தருவனுக்கும் நடந்த சங்கீதவாதத்திலே அவ்வர்ச்சுனன் சங்கத்தின்றலைமை வகித்தானென ஒருகதையுண்டென்றும், அதையுட்கொண்டு, “ஏழிசைநூற் சங்கத்திருந்தானும்” எனக்கூறப்பட்டதென்றும் அவர்கள் எழுதிய கதையும் ஷெ புராணங்களிலே என் பார்வையிற் காணப்படவில்லை. ஆனால்,அவ்வர்ச்சுனனது யாகசாலைகளில் நாரதமுனிவர் வந்திருந்து, அவன்புகழை வீணையில் அமைத்துப் பாடினரென்பது

மட்டும் மச்சபுராணத்துக் கூறப்பட்டுள்ளது. இனி, "நீள் விசும்பில் நற்றேவர் தூது நடந்தானும்" என்பதனை, அவர்கள் ரஜியின் கதைக்கிணக்கிச் சொற்களையிழுத்து வலிந்துபொருள் கூறுவர். அஃதாவது, "இந்திரனால் அனுப்பப்பெற்றதேவர்கள் யதுவமிசத்தரசனான ரஜியிடம் வந்து வேண்டி, அவனை அழைத்துக்கொண்டு போய்த் அசுரர்களைக் கொல்வித்தார்கள்" என்றுள்ள புராணகதைக்கியைய, நற்றேவர் தூதாகவர நீள்விசும்பிற் சென்றவனும் (பார் - அதம் - போர்) = பூமி நாசமாகத்தக்க போரைச்செயித்தவனும்—என்றுஅத்தொடர்களை வலித்து இசைத்துக்கொண்டதாகும்: இவற்றில் நற்றேவர் தூது நடந்தானும் என்பதற்கு, நற்றேவர் தூதாகவரத் தான் நடந்தானும் என்று பொருள் கூறுவதும், பார்- அதம்-போர் என்று பிரிப்பதும் பொருத்தமோ என்பதை அறிஞர் ஆராயக்கடவர். அன்றி, கண்ணபிரானுக்குத் தூதுநடந்த விஷயத்தை இணக்கி அவர்கூறிய வேறுரையும் நேரேசெல்லும் பொருளாகாமை காண்க. இனி, "இப்பாட்டுப் பாண்டியனதாயின், யாதவருக்குப் பாட்டில்லையே" யெனின்;— சுயம்வரத்தில், ஒவ்வொரு வமிசத்தையுங்கூறி அரசர்களைச் சுட்டாமல், நாட்டின் பெயரைக்குறித்தே அவர்களை கூறிச்செல்லுதலாலும், யதுவமிசத்தரசர் பலநாடுகளிலுமிருந்து ஆண்டவராதலால் புகழேந்திகூறிய மச்சம் மத்திரம் பாஞ்சால முதலியவற்றிலொன்று அவர்நாடாயிருத்தல் கூடுமாதலாலும் இக்கேள்வி, ஏற்றதன்று. இங்ஙனம், யாதவ அரசருக்குரியதாக அவர்கள் கூறியகதைகட்கு ஏற்றபிரமாணங்களை அவர்கள் காட்டாததோடு, என் ஆராய்ச்சியிலும் அவை காணப்பட்டில. ஒருகால், அங்ஙன முரையிட்டவர்கள், யானறியாத வேறு புராணங்களிலிருந்து இவ்விஷயங்களைக் கண்டு எழுதியிருக்கவுங் கூடும். அங்ஙனமாயினும், இவ்வெண்பாவிலுள்ள எல்லாவரலாறுகளும் யதுவமிசத்தரசர்க்கு நேரே ஒட்டக் காணேம். அன்றியும் தமிழ் நூல்களில், "கடல்விளிம்பலம்ப நின்றான்" என்று நேரே பாண்டியனுக்கு வழங்கும் பிரபலமான பெயர்வழக்கு அவர்களுரைக்கு ஏற்புடையதன்று. இவ்வாறிருத்தலால், உண்மையிதுதான் என்று என்னால் துணியக்கூடவில்லையாயினும், செந்தமிழறிஞர் இவ்விஷயங்களை ஆராய்ந்தளத்தற்குரியரென்று நம்பி, என் அபிப்பிராயங்களைத் தெரிந்தவரை வெளியிட்டேன்.

பத்திராசிரியர்.

*

உ

சிவமயம்.

முதற்குறட்கருப்பொருள்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

இது தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் தமது திருக்குறளென்னும் பெருமறைமுகத்தே செய்த கடவுள் வாழ்த்து. அஃது அவர்க்குக் கடவுள் வாழ்த்தாயும் ஏனோர்க்கெல்லாம் அருமறைத் தத்துவோபதேசமாயுங் கிடந்திலகுவது. திருவள்ளுவரை உலகந் தெய்வப்புலவரெனவும் பிரமாவதாரமெனவுங் கொண்டு கொண்டாடுவது அவர் செய்தருளிய திருக்குறளிலேயுள்ள குறட்பாக்களொவ்வொன்றும் உருவத்தாற்சிறியனவேயாயினும் வனப்பாலும்பொருட்சிறப்பாலும் ஆழத்தாலும் விரிவாலும் தமக்கு ஒத்ததும் மிக்கதும் வேறொன்றில்லை யெனும்படி தனித்துவிளங்கும் தண்டாப் பெருஞ்சிறப்பு நோக்கியேயாம். அதுபற்றியே "கடுகைத்துளைத் தேழ்கடலைப்புகட்டிக்குறுகத்தறித்தகுறள்'என்றிடைக்காடனாரும் "அணுவைத்துளைத்தேழ் கடலைப்புகட்டிக், குறுகத்தறித்தகுற"ளென்று ஔவையாரும், திருக்குறளினியல்புக்குவமை கூறப் பலவாறு நாடியுந்தேறாது அபூதவுவமையால் அதன் சிறுமையையும் அச்சிறுமையினுள்ளே அடங்கிக்கிடக்கும் பொருள்விரிவையு மெடுத்துலகுக்குக் கூறி அதிசயிப்பாராயினர். ஊன்றிநோக்குந்தோறும் பேரதிசயம் விளைப்பதும் அதுகூறும் பொருளை யாவரும் மறாது உறுதிப் பொருளென வுடன்படச்செய்யும் வசீகர சக்தியுடையதும் குறளொன்றேயாம்.

உலகத்து மாதரெல்லாம் ஒவ்வோரூனஞ் சொல்லிக் கழிக்கப்படினும் அருந்ததியோவென்றவளவில் வாய்புதைத்துப் போற்றப்படுவது போல, ஏனைய நூலெல்லாம் ஒவ்வோரூனங் கற்பிக்கப்படினும் திருக்குறளென்றவளவில் சிரமிசைக்கொண்டு கொண்டாடுவர். இத்துணைப்பெருஞ் சிறப்பினதாகிய திருக்குறளுக்குரை செய்தார் பதின்மருள்ளும் பரிமேலழகரே மெய்யுரை செய்தார். அவரே

திருவள்ளுவரது திருவுள்ளக்கருத்தமைதியை உள்ளவாறு கண்டுரை செய்தவர் என்பது,

"திருத்தகுசீர்த்தெய்வத் திருவள்ளுவர்தங்
கருத்தமைதிதானே கருதி-விரித்துரைத்தான்
பன்னுதமிழ்தேர்பரிமேலழகனென
மன்னுமுயர் சேமன்வந்து."

என்னும் பாயிரத்தாற் றுணியப்படும். அவருரை இல்லையாயின் திருக்குறளையோதியுணர்தலும் உண்மைப்பொருள் துணிதலும் இல்லையாம். தத்துவார்த்தங்களைக் குருமுகமாகக் கேட்டுணரவேண்டுமாதலின் அவைகளை நூலாசிரியரும் உரையாசிரியரும் குறிப்பினாலும் சுருக்கமுறையாலும் கூறிப்போவாராயினர். அவற்றை யெல்லாம் ஆய்ந்து மூகித்துமுணர்வது கற்றோர் திறத்ததாம்.

இத்திருக்குறளினாற் கொள்ளக்கிடக்கும் தத்துவார்த்தங்களை ஒருவா றீண்டெடுத்துக் காட்டுதும்.

இத்திருக்குறளிலே அகரத்தை முதலிலும் 'உலகு' என உகரத்தைக் கடையிலும் வைத்தது அவை பிரணவப்பகுதி யாதலாலும் மங்கலமாதலாலுமாம். வேதத்து முதலிலும் ஈற்றிலும் ஓதப்படுவது பிரணவமன்றோ. ஓசையானது பரை பசியந்தி மத்தியமை வைகரி என்னும் நான்கு அவஸ்தையாற் பிறக்கும். பரைக்கு ஸ்தானம் மூலாதாரம். அங்கு நின்றுமே அகரம் பிறப்பது. இயல்பாக அங்காந்த மாத்திரத்தே அகரம் பிறத்தலாலும், அங்காத்தலாகிய வாய் திறத்தலின்றி ஓரெழுத்தும் பிறத்தல் கூடாமையாயின் எவ்வெழுத்தும் அகரத்தைப்பற்றியல்லது பிறவாமையாலும், அகரமே எல்லாவெழுத்துக்கும் முதலெனப்பட்டது. அகரமின்றி ஓரெழுத்து மொலியாது. அஃதின்றியோரெழுத்து மியங்காது. அஃதின்றியோரெழுத்தும்பிறவாது. அஃதின்றியோரெழுத்தும்கிலையாது. அஃதின்றியோரெழுத்தும்செவிப்புலனாகாது. அஃதுஎல்லாவெழுத்துக்கும்தாரகமாகவுள்ளது. அஃது எல்லாவெழுத்துக்கும் அந்தரியாமியாகவுள்ளது. அஃது எல்லாவெழுத்தின்கண்ணும் உள்ளும் புறமுங் கோத்துநிற்பது. அதுவே எழுத்துக்களுக்கெல்லாங் காரணமாகவுள்ளது. அதுவே எல்லா வெழுத்துக்களுமாயுள்ளது.

வாக்கு மனாதீதமாகிய பரம்பொருளினதுண்மையை நிரூபித்தற்குப் பிரத்தியக்ஷஉவமை இதனினுஞ் சிறந்ததொன் றிவ்வுலகி லின்மையால், பரிமேலழகரும் இது தலைமைபற்றிவந்த வெடுத்துக் காட்டுவமையென்றார். அது மாத்திரமன்று. வேதசிரசாகிய தைத்திரியத்திலே "அகரமே பரமகாரணம், அதினின்றுமே உலகந்தோன்றிற்று" எனவருஞ் சுருதியே எடுத்துக்காட்டப் பட்டமையின் அதனைத் தலைமைபற்றி வந்த வெடுத்துக்காட்டென்றார் எனினு மொக்கும்.

இத்திருக்குறளில் முதலில் அகரத்தையும், இடையில் (ஆதி என்பதில்) இகரத்தையும் இறுதியில் உகரத்தையும் வைத்தோதியதை நோக்க அதுவுமோர் இரகசியப்பொருள் குறிப்பதாகும். அது மாகேசுவரசூத்திரம் பதினான்கனுள் முதற்சூத்திரமாகிய "அஇ உண்" என்பதனை விளக்கியபடியாம், "அஇஉண் என்பதில் 'ண்' அநுபந்தம். அது சூத்திரோச்சாரணத்துக் குபகாரமாக நிற்பதோர் பொருளில்லா வொலியாம். ஆகவே "அ இ உ" என்பதே பொருளுடையதாம். அச்சூத்திரம் பதினான்கும் வியாகரணகாரருக்கு வியாகரணசூத்திரமாகவும், அவற்றை அருளிச்செய்யக்கேட்ட சனகாதியர்க்குப் பரமதத்துவோபதேசமாகவுமுள்ளன. தத்துவோபதேசப்படி "அ" என்பது நிர்க்குணப்பிரமத்தையும் "இ" என்பது சிற்சத்தியையும் "உ" என்பது விஷ்ணுவையு முணர்த்தும்.

வான்மீகிபகவானும் தாஞ் செய்த இராமாயணத்துக்குக் காயத்திரி சுலோகத்து அக்ஷரம் இருபத்துநான்கையும் அடியாக வெடுத்து ஒவ்வோராயிரத்து முதலிலும் ஒவ்வோரக்ஷரமாக வைத்து இருபத்துநாலாயிரம் பாவினால் அதனை முடித்தனர். அதனால் அது காயத்திரி ரூபமெனப்படுவதாயிற்று. திருவள்ளுவரும் வேதப்பொருளையும் தத்துவோபதேசங்களையும் வைத்துத் தமது திருக்குறளைச் செய்தருளினமையால் அது தமிழ்மறை உத்தரவேத மென்னும் பெயர்களைப் பெறுவதாயிற்று. இத்திருக்குறளினாற் கடவுளதுண்மை கூறப்பட்டதேயன்றி அதிகாரத்திற் கூறப்புகுந்த கடவுள் வாழ்த்துக் கூறப்படவில்லையே யெனில், இருதயகமலத்தில் ஓங்காரத்தைத் தியானித்து இத்திருக்குறளைக் கூறினாராகற்பாலர் என்க.

என்னை? "சர்வவியாபியென்று பிரணவத்தை இருதயத்திலே தியானிக்கின்ற புத்திமான் சோகமடைவதில்லை." என்பது சுருதியன்றோ.

இனி வாளா பகவனென்னாது "ஆதிபகவன்" என்றது விசுவமூர்த்தியை. அது "சாக்கிரஸ்தானமுடைய விசுவமூர்த்தி பிரணவத்தில் முதல் மாத்திரையாகிய அகரம்; அது சர்வவியாபகமாயிருத்தலாலும் ஆதியுடைத்தாயிருத்தலாலும் இவ்வாறு கூறப்படும். எவனிவ்வாறு அறிகின்றனோ அவன் சர்வாபீஷ்டங்களையுமடைகின்றான்" என்னும் மாண்டூக்கியோபநிடதத்தாற் றுணியப்படும். "இவ்வாழ்த்து ஏற்புடைக்கடவுளை எனவறிக" என்றதும் இங்கியாயம்பற்றியேயாம்.

இன்னும் இக்குறள் ஈரடியும் ஏழு சீரும் இருபத்தைந்தெழுத்துமுடையது. ஆசிரியர் தாம் செய்யப்புகுந்த நூலுக்கு விஷயமாகவெடுத்துக்கொண்ட விஷயம் இல்லறந்துறவறம் என்னுமிரண்டுமேயென்பதுபோதர ஈரடிப்பாவையெடுத்துக் கொண்டார். ஏழுசீரால் எழிலுங் குறிக்கப்பட்டன. முதலடி நான்கு சீரும் அறம்பொருளின்பம் வீடு என்னும் நான்கு பொருளையும், கடையடி மூன்று சீரும் அந்நாற்பொருளையும் முப்பாலாற் கூறினரென்பதையுங் குறிப்பனவாம். தத்துவமிருபத்தைந்து மல்லதுலகெனப் பிறிதில்லையென்பது போதர இருபத்தைந்தெழுத்தாற் கூறினர். தத்துவமிருபத்தைந்து மல்லதுலகெனப் பிறிதில்லை யென்பது, "சுவையொளி" யென்னுந் திருக்குறளுரையிற் காண்க. இன்னும் இவ்வருமைத்திருக்குறள் இரண்டு வாக்கியங்களால் முடிந்துள்ளது. "எழுத்தெல்லாம் அகரமுதல" என்பது ஒன்று; "உலகு ஆதிபகவன் முதற்று" என்பது மற்றது. அவை இரண்டும் பிரபல சுருதிவாக்கியங்களாம். "அகாரமே எல்லாச் சொற்களும்; விசுவமூர்த்தியே உலகமெல்லாம்" என்னும் சுருதிகளையே திருவள்ளுவர் "அகரமுதல வெழுத்தெல்லாமாதி-பகவன்முதற்றேயுலகு" எனத்தமிழில்மொழிபெயர்த்தாரென்பது தெள்ளிதிற் றுணியப்படும். அவையிரண்டும் சுருதிவாக்கியமென்பது மாண்டூக்கியம் மூன்றாவது கண்டம் இரண்டாவது சுலோகத்துச் சங்கரபாஷியத்திற் காண்க.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

உ

கணபதிதுணை.

சாந்துப்புலவர் வரலாறு. *

செந்திருமார்பன்மருதுநராதிபன்செப்புகென்ன
மைந்தர்செல்வத்தொடுமாஞானம்வேண்டிமயூரகிரிப்
பைந்தமிழ்க்கோவையைப்பாடினன்சர்க்கரைபாலனெங்க
ளிந்திரன்சாந்துமகிபாலவாலகவீச்சுரனே.

என்னுஞ் சிறப்புப்பாயிரச் செய்யுளால் மருதுபாண்டியன் வேண்டு கோளின்படி சர்க்கரைப்புலவர் குமாரர் சாந்துப்புலவரென்னுங் குழந்தைக்கவிராசர் "மயூரகிரிக்கோவை" என்னும் நூலியற்றியதாகத் தெரிகிறது.

இவர் பாண்டிவளநாட்டில் தேவாரம்பெற்ற தலங்களுள் திருப்புனவாயிலுக்கு மேற்கில் மூன்று கடிகை தூரத்திலுள்ள சிறுகம்பையூரிலிருந்த வேளாளகுலதிலகரும், இராமநாதபுரஞ் சம்ஸ்தான வித்துவசிகாமணியாய் விளங்கியவருமாகிய சர்க்கரைப்புலவருடைய குமாரராவர். இவர் தம்பிமார் சர்க்கரைமுத்துமுருகப்புலவர், சீனிப்புலவர், சீனிச்சர்க்கரைப் புலவர் முதலானவர் என்ப.

இவர்பிறந்தவருடம் இன்னதென்று தெரியவில்லை. ஆனாலும் இந்தக்கோவையினேட்டுப் பிரதியினீற்றில் காலயுத்தி-௵ தை ௴ ௨௭௳ சுக்கிரவாரநாளில் மயூரகிரிக்கோவைபாடி யரங்கேற்றியதென்றெழுதியிருப்பதால். கி-பி. 1798-ல் இந்நூலியற்றியதாகத் தெரிய வருகிறது.

இவர் சிறுபிராயத்திலே தமது பிதாவினிடத்தில் இலக்கிய இலக்கணங்களை ஐயந்திரிபறக்கற்று வருங்காலத்தில், கி-பி. 1780-௵ முதல் 1801-௵ வரையில் சிவகங்கையை ஆண்டுவந்த பெருங்கொடையாளரும் இம்மைப்பயன் கருதாது மறுமைப்பயனையே கருதிய வள்ளலுந் தம்மை யொழியத் தமவெனச்சார்ந்தவைகளையெல்லாம் அக்காலத்துத் தமிழகத்திலுள்ள புலவர் பலர்க்கு முதவியன்னோரையொருங்குகூட்டி அன்னோருடன் போதுபோக்குதலையே பெரும்பயனாகக்கொண்ட அருங்கலைவிநோதரும், அநேக

* இவ்வியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் ஏழாவது வருஷக்கூட்டத்தில், இந்நூலாசிரியரின் வழியினரும், இப்போது மன்னார்குடிப்'பின்டிலே' காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாயுள்ள ஸ்ரீமத்-சர்க்கரை. இராமசாமிப்புலவர் அவர்களால் எழுதிப்படிக்கப்பெற்றதாகும்.

தேவாலயம் பிரமாலய மன்னசத்திரங்கட்குப் பலகிராமங்களை முற்றாட்டாகவளித்த தர்மப்பிரபுவும் ஐதராலியின்உதவியைக்கொண்டு நவாப்பின் படைகளை முறியடித்து வெற்றிமாலைகொண்ட ரணசூரருமாகிய மருதுபாண்டியனென்பவர் சேதுமார்க்கத்திலுள்ள கலிய நகரியில் அன்னசத்திரங் கட்டுவித்ததற்கு வந்திருந்ததைக் கேள்வியுற்ற சர்க்கரைப்புலவர் அந்த மருதுபூபதியைப்பார்த்துவர விரும்பி அட்டநாகபந்தமென்னுஞ் சித்திரகவியொன்றெழுதி வைத்துவிட்டுத் தாம் சிவபூஜைசெய்யச்செல்லாராயினர். அச்சமயத்தில் ஆண்டினிளையாராயினும் அறிவின் முதியவராகிய சாந்துப்புலவர் தமது தகப்பனார் எழுதிவைத்திருந்த அட்டநாக பந்தத்தைப்பார்த்துத் தாமும் அதனுள் அட்டநாகங்களைச்சிறியவடிவாய் வரைந்து ஒரு செய்யுளையுமெழுதி முன்னிருந்த இடத்தில்வைத்துவிட்டுப் போய்விட்டனர்.

பூசைமுடித்துப் போசனஞ்செய்துவந்த புலவர் தமது பரிசனங்களுடன் சிவிகையூர்ந்து கலியநகரிக்குச்செல்லக், கவிராசர்வரவு கேட்ட புவிராசராகிய மருதுபூபதி அகங்களிகூர எதிர்சென்றழைத்து உபசரிக்க, புலவர்தன் ஞாபகத்திலிருந்த அட்டநாக பந்தச்செய்யுளைச் சொல்லிப்பொருள்கூறிப் பின் அக்கவிவரைந்த ஏட்டை அரசரிடங்கொடுக்க, பெற்ற அரசர்படித்துப்பார்த்து பெருமகிழ்வுற்றுக் கவிராசரே! தாங்கள் எழுதிய அட்டநாகங்களுங் குட்டிபோட்டுளவே யென்னையென, மதியூகத்தாலறிந்த புலவர் குழந்தையைக்கேட்கவேண்டுமென்று மறுமொழி கூறக்கேட்ட அரசர் அக்குழந்தை எங்குளது, யாருடையது, என வினவியறிந்து அக்குழந்தையைப் பார்க்கவேண்டுமென்று உடனே கொண்டுவரும்படி சிவிகையைச்சிறுகம்பையூருக்கனுப்பி விட்டனர். இராசதிருட்டியாகுமே யென்று பயந்தபுலவர் தம் ஊருக்குப்போய்க் குழந்தையை யனுப்புவதாகப் பன்முறை கூறியும் பார்க்கவேண்டுமென்னும் அவாமேலிடலால் புலவர் சொல்லை மறுத்துவிட்டனர் பாண்டியன்.

பின்னுஞ்சிறிதுபோதுக்குள் ஏழுகடிகை தூரத்திலுள்ள சிறுகம்பையூரிலிருந்த குழந்தை பல்லக்கில் வந்துசேர்ந்தது. வையவறிந்த பூபதி குழந்தையைத்தழுவி இதிற்குட்டிநாகம் வரைந்து பாட்டெழுதினவர் யாவர் என்றுகேட்க எழுதினவன் யானேயென்று துடுக்

காய்ச்சொல்ல, பாண்டியன் அடங்காப்பெருமகிழ்வுற்று "முன்னே முளைத்தகாதிலும் பின்னேமுளைத்தகொம்பு வலியுடைத்து" என்னும் பழமொழிக்கிலக்காவாரிவரே யென்றுளமகிழ்வுற்று, கவிராசரே! இன்றுமுதல் குழந்தை என்னருகில் இருக்கவேண்டுமென்று சொல்லிவிட்டனர். புலவர்திகைத்து வருந்தி ஒருவாறுசிறிதுதேறி அரசே! குழந்தை இலக்கிய இலக்கணங்கள் படித்து வருகின்றமையால் ஒருவாறு முற்றியபின் நானேகொண்டுவந்து சமுகவித்துவானாகவிருக்கச்செய்து வருகிறேனென வேண்டினர். குழந்தை இப்பொழுதே பெரும்புலவர்தான்: இன்னும் புலவராக்கவிரும்பினால் தாங்களுங்கூட வந்திருக்கலாம். அன்றேல், என்னருகிலுள்ள வித்வான்களைக்கொண்டுபடிப்பித்தலுமாம் என்று சொல்லியபின்னரும் மறுத்தற் கஞ்சியபுலவர், விசுவாமித்திரமுனிவர் கையில் ஸ்ரீராமபிரானைப் பிடித்துக்கொடுத்த தசரதனைப்போற் கலக்கமுற்று, தம்மூர்போய்ச் சேர்ந்தனர். அப்போது சாந்துப்புலவருக்கு வயதுபதினாறு. அன்று முதல் சாந்துப்புலவரை யாவரும் அரண்மனைக்குழந்தையென்றழைப்பாராயினர். குழந்தை மருதுபாண்டியனுடைய புகழென்னுந்தொட்டிலாடி அவரது சங்கப்புலவர்களென்னுஞ் செவிலியானுங்கல்விபமுதூட்டப்பெற்றுக் கவிச்சிரோரத்தினமென்று பெரும்புலவர்களெல்லாங் கொண்டாடும்படி பலசித்திரங்களுமமைய நிமிஷகவிபாடுவதிலும் பிரசங்கஞ்செய்வதிலும் நாவன்மையுடையவராய் நடுநாயகமாய்ச்சிறந்து விளங்கியதன்றி, மருதுபாண்டியனுக்குக் கண்ணுங்கவசமுமனையராய்ப் பிரதிநிதியாயுமிருந்து இராசாங்க காரியங்களை நிருவகித்து வந்தனரென்றுங்கூறுப. இது, சிறப்புப்பாயிரச்செய்யுளில் 'எங்களிந்திரன் சாந்துமங்கிபால வாலகவீச்சுரனே' என்பதனாலும் வலியுறுகின்றது.

இவரிங்ஙனமிருந்தகாலத்திற் பலதமிழ்ப்புலவர்கள் மருதுபாண்டியனவையை யலங்கரித்திருந்தனரென்பதும் அவர்களுள் இவர்கவிச்சிரோரத்தினமாய் விளங்கினரென்பதும் அப்புலவர் பலர்க்கும் பல கிராமங்களை முற்றூட்டாகவளித்து மருதுபூபதி பாதுகாத்துவந்தனரென்பதும் அக்காலத்துத் தம்பிபட்டியிலிருந்தவரும் வாலசரஸ்வதி எனப்பட்டப்பெயர் பெற்றவருமாகிய முத்துவேலுக்கவிராசரியற்றிய கவிகளாலுமுணரலாகும்.

பின்வருங்கவிகளுள் முன்னையது அக்காலத்துச் சென்னபட்டணத்திலிருந்த அசாது நவாப்பினுடைய மந்திரியாகிய இராமசாமிப் பிள்ளைக்கெழுதிய சீட்டுக்கவியும் பின்னையது முற்கவிக்கு நவாப்பிடஞ் சிவிகைமுதலான விருதுகளுடன் பரிசுபெற்று மீண்டூர்வந்த பின்பு நாலுவருடகாலந் தமது சபைக்குக் கவிராயர் வரவில்லையென்று சர்வமானியமாக அளித்திருந்த பூலாங்குண்டு எனனுங் கிராமத்தைத்தீர்வைக்கிராமமாக்கிவிட்ட மருதுபூபதியை மீட்டுங்கிராமமும் சிவிகைதாங்குபவர்கட்கு மானியமும் கொடுக்கவேண்டுமென்று பாடியதுமாகும். அக்கவிகளுள்,

சீட்டுக்கவி.

புனிதமிகுநாற்கவிவிலாசன்மெய்த்தவஞானபூஷணன்சைவாகமப்
பொக்கிஷமதான * சங்கரலிங்கமுனிவனிரு பொற்பதந்தன்னை நிதமும்
போற்றுசெய்†முத்துவேலாயுதக்கவிராசபூபன்வரவிட்டதிருபம்
பூமண்டலாதிபதியசரதுநபாபசம்பூரணமதாகமெச்சும்
புரவலகுபேரபாக்கியராமசாமிநற்புண்ணியனெதிர்ந்துகாண்க
புகழானநமதுசுபகரமெலாங்கேளுமற்புதமானதென்குழந்தா
புரியிலகுதுரைமுத்துவடுகநாதேந்த்ரன்மகிழ்புவனமுழுதும்புரக்கும்
பூபாலன்விசுவைவளர்மருதுபாண்டியராசபோசனுயர்சமுகமதனிற்
கனமருவுபஞ்சலக்ஷணவித்தக்ஷணநலக்கமழும்வேதாந்தவாரி
கரைகண்டமுகில் ‡ சுப்ரமணியவிற்பனவசீகரனென்றுமிலகியவிலக்
கணவிலக்கியகற்பனைச்சொக்கநாதக்கவிச்சக்ரவர்த்தியென்றுங்
கருங்குளஞ்சங்கரநாராயணவதானிமருகன்சொக்குபூபனென்றுங்
கல்விப்பிரசங்கிசர்க்கரையுதவுசாந்துக்கவிச்சிரோரத்னமென்றுங்
கலைமுற்றுவித்வசனர்துதிமுத்தமிழ்க்குமதிசாரியுபகாரிசகல
கலைநிபுணநாகலிங்கேந்த்ரனென்றும்மதுரகவியனந்தகவியேன்றும்

---

* இந்தச் சங்கரலிங்கமுனிவரையே இந்தக்கோவையிலும், எ, சஎக-ம் பாடல்களிற் குறித்துரைக்கின்றனர்.

† இந்த வேதாந்தசுப்பிரமணியபிள்ளையவர்களே மயூரகிரித்தலபுராணம் பாடியவர்.

‡ இந்த முத்துவேலுக்கவிராஜர் என்பவர் இற்றைக்கு உ௦௦-வருடங்கட்கு முன்னிருந்த சவ்வாதுப்புலர் முதலியோரையு மிப்பாட்டிற் குறித்திருப்பதால் தமதுகாலத்து முற்பட்டவர்களுட்சிலரையுங் கூறுவதாகத் தெரிகிறது.

கலைமதங்கொண்டிடு சவாதுக்கவிச்சரபகாம்பீர்யதுங்கனென்றும்
மனமதுசபைக்குண்மலையாமற்சபாசெனவழுத்தும்வெண்பாப்புலிக்கா
வலனென்றுநீடுபொன்னங்காவிஞரொன்றுவளரிலக்கணவிளக்க
மாசிலாமணியெனும்பண்டாரமென்றுநல்வாக்கியாவிடைநாதநா
வலனென்றுமிதிலைநல்லூரிஞெடுசெவ்வூரில்வருகவிஞரொன்றும்வாணி
மருவுகொன்றைக்குளத்தண்ணுவியாரென்றும்வளமிகக்கண்டுகொண்ட
மாணிக்கநாட்டினில்விளங்கியதமிழ்ச்சிகாமணியெனும்பெரியமுத்து
மாரியப்பக்கவிஞனென்றுநதிகுலசைவமணிதிருப்புத்தூர்வளர்
வாலசரஸ்வதியெனதுபாட்டனெனவுயர்முத்துமாரியப்பேந்த்ரகவிஞ
ரெனவுமோர்பெயர்பெற்றுமுத்தமிழகத்தியற்கெண்மடங்கதிகமாஞே
ரிப்படிக்கவிவல்லவர்பதிஞயிரம்பேர்களிவர்கடனிலொருசிறியன்யா
னேதவிடம்விட்டுமிகுதூரதேதாலைதனில்வந்தேதன்னினிவ்வுலகமதனில்
எமதுதுரையோராசாசர்கள்சிரோமணியெனத்துதித்தவர்கள்சமூகத்
திலகுபிரபந்தகவிவாலசரஸ்வதியுநாமெனவுநற்பெயர்செலுத்தி
யாவரும்புகழவேசெயவிருதுபெற்றிடவுமியல்பாகவந்தேனலா
வில்லாமையால்வந்ததன்றுநீதமிழறிந்திரவலர்க்குதவுதாதா
னென்னலாலுனைநாடிவந்தனன்கீர்த்திதமிலகதியருள்புரிவையே.

ஞாலமதிலுயர்கின்றசிவகங்கையாசுசிலைநாட்டியகிரீடியான
ராஜேந்திராசெயம்செயம்விசயமேவுரகுராமாசெயங்செயங்கன்
ஞமருதுபாண்டியதுரையேசெயஞ்செயமெமதுநலமகிழ்ந்தினிதுகேண்மோ
நாலுவருடஞ்சென்னபட்டணத்தசாதுநவாப்சாயபவர்கள்சதிரில்
நதிகுலாதிபன்ராமசாமிபூபதிதயவினாற்சிவிகைவெகுமதிகளும்
நலமுறப்பெற்றுமவிடத்துப்ராபுகணேயநயமுற்றுமிவ்விடம்வர
நாடிமூட்டைக்காரர்சத்ரம்வந்தோமன்றிராத்திரிப்பெட்டியுடனே
நகைவகைவிராகனுள்ளதைப்பிராமணரிருவர்நவியாதுகைக்கொண்டுமப்
பாலவர்களும்போயினார்யான்விழித்ததைப்பார்த்தவுடன்மனதுகவலை
பாய்ந்தவர்களைத்தேடியுங்காண்கிலாமலிதுபகவசங்கற்பமென்று
பாதைகூடிப்புதுச்சேரிதனில்வந்துயான்பரிதபித்திடும்வேளையில்
பசியுறுகுழந்தைகட்கனையெனவும்வாடியபயிர்க்குமழைமாரியெனவும்
பாவாணருக்குதவுகற்பதருபுதுவையம்பதியாதிபதிதன்செயம்
பதியமாசிம்மமகாராசசமூகஞ்சேதுபதிமற்றுமுளவர்சாதம்
பரிவுற்றுமேவதிகவிருதுபெறுகங்கைகுலபாக்கியசிலாக்கியதமிழ்விற்
பன்னன்முன்முனைவாரியன்னவன்மேழிப்பதாகையன்பூமிபாலன்
வாலமதரூபசுபஞனந்தஞனசெயமாலென்னையுனதுசமூக
வாசற்பிரபந்தகவிவாலசரஸ்வதியென்றமாத்ரமேவாவழைத்து

மாதயவுசெய்த தாலவன்மீதியானுமொருமயிலிசைத்தாதுசொல்ல
மனமிகமகிழ்ந்ததிகவெகுமதிகள்செய்திந்தவையமதிலுமதுதுரைபேர்
வளரவேபுகழைமென்மேலுமேதுதியுமெனவண்மைமொழிகூறவேயவ்
வரிசைபெற்றவனைமிகவாழ்த்தியேதில்லைநகர்வந்துபொன்னம்பலத்தில்
மருவுநடராசனைத்தெரிசனஞ்செய்துநல்வழிமார்க்கமெய்திவிரைவாய்
வளமிகுந்திரிசிரபுரத்தில்முத்துக்கிருஷ்ணமாலுதவிகொண்டுமிப்பாற்
கோலமிகுதென்றிருப்புத்தூரில்வந்துநங்குலதெய்வமாகியருளே
குடிகொண்டகாசிவயிரவமூர்த்தியிருபதங்கும்பிட்டிறைஞ்சியெமது
குருவானஞானசங்கரலிங்கமாமுனிக்குருசிலைமனத்துள்வைத்துக்
கோகனகமலரலரும்வாவிதனிலேபசியகொட்டியுமலர்ந்ததெனயான்
குணமுற்றதமிழ்வித்வசனருற்றவுயர்முக்யகொலுவுமதுசமுகம்வந்து
குழவிதாய்முகநாடுமதுவெனக்கருணைபொழிகுளிர்முகமதனைநாடினேன்
குலவுசிவிகைக்கதிகவிருதும்பளமுங்கொடுத்துமுன்னிலைமைபூலாங் [யே.
குண்டுவெயலூர்ந்தந்துமென்றும்நின்றயவுளங்கொண்டெனைக்காத்தருள்வை

[என்பன. இக்கவிகளை எனக்குதவியவர், சிவநேசச்செல்வர்களும் எனதன்பிற் கருங்கலமாகவுள்ளவர்களுமாகிய காரைக்குடி ஸ்ரீமத்-ராம. கு. ராம. சொக்கலிங்கச்செட்டியாரவர்களிடத்திற் கல்விபயின்றவரும் இந்த முத்துவேலுக்கவிராசர் பௌத்திரராகிய சொர்ணச்சாமிக்கவிராயர் குமாரரும் இப்போது தேவகோட்டையில் வசிப்பவருமாகிய வேலுச்சாமிக்கவிராயர்.] இத்தகைய மாட்சிமை பெற்றிருந்த மருதுதுரையருகில் இவர் மேற்கூறியவாறு அமரும்நாளிற் பூபதிக்கு இராசபிளவை புறப்பட்டு பலமணிமந்திரமாதியவைத்தியங்களால் அனுகூலமாகாமல் மிகவும் வருந்துவராயினர். அப்போது ஒரு முதியவர் பூபதியைநோக்கி, அரசே! கலியுகவரதராகிய சுப்பிரமணியக்கடவுளுடைய பக்தர்களால் விபூதிபோடப்பெறின் அநுகூலமாகுமென்று சொல்லக்கேட்டபாண்டியன் அங்ஙனமாயின் அத்தகையார் யாவரென்று வினவ, நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகட்குக் குமரக்கடவுள் பிரசன்னமுள்ள குலதெய்வமாதலால் அவர்களுள் எவரேனும் விபூதிபோடுவது நலமென்றுரைக்கவே, அத்தகைய செட்டியாரொருவரைக் கொண்டுவருகவென்று உத்தரவளித்தனர்.

உத்திரவுப்படிசென்ற ஏவலாளர் எருத்துமாட்டிலேற்றியஉப்பு வியாபாரியாக எதிர்ப்பட்ட காடன்செட்டியாரென்பவரை அழைத்து

வந்து பாண்டியன்முன்புவிட, விடப்பட்ட செட்டியார் யாதாமோவெ
ன்று அச்சமுற்றயருங் குறிப்பறிந்தபாண்டியன் முகமன்கூறி உமது
குலதெய்வமாகிய சுப்பிரமணியக்கடவுளுக்குப் பிரார்த்தனைபண்ணி
யானிப்பிள்ளையால் வருந்தாது பிழைக்கும்வண்ணம் விபூதியளிப்பீ
ராகவென வேண்ட, செட்டியார் சிறிது மனந்தெளிந்து இந்தமருது
பாண்டியனுக்கு அநுக்கிரகம்பண்ணி என்னை இவ்விடத்தினின்றும்
விடுவிக்கவேண்டுஞ் சண்முகநாதாவெனச் சிந்தித்து விபூதியுதவினர்.
அப்பால் பாண்டியன் அருகிருந்தவரைநோக்கிச் செட்டியாருக்கு
உண்டி முதலியனவளித்து உபசரித்து வைத்திருங்களென்றுகட்டளை
யிட்டவாறு உபசரிக்கப்பெற்றும் செட்டியார் அச்சமுடையராய்ச்
சண்முகக்கடவுள் திருவடிகளைத் தியானித்திருந்தனர்.

வெகுநாளாக நித்திரையில்லாமல் வருந்தியபூபதி அன்றிரவு
அயர்ந்து தூங்கும்போது பாலசந்நியாசி ஒருவர் மயிற்றோகையுடன்
வந்து தம்பிள்ளையைப்பிதுக்கி ஆணியெடுத்து வாழை இலையில்வை
த்துவிட்டுப் பிள்ளைவாயில் விபூதியை வைத்ததாகக் கனவுகண்டு
வெருண்டு எழுந்து பார்க்கும்போது அச்சமயத்தில் யாவும் நனவாக
வேயிருக்கக்கண்டு மகிழ்ந்து காடன் செட்டியாரைத் தமது அருகு
வரவழைத்து "எனக்கு அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீயே" என்று
புகழ்ந்து அன்றுமுதல் அண்ணன் என்று முறைபாராட்டிப் பேரன்
புடன் தமதருகிற் சிலநாளேனும் இருக்கும்படி வேண்டிக்கொண்ட
னர்.

அங்ஙனஞ் செட்டியாரிருக்க, சிலதினத்துள் தேகசௌக்கியமுற்
றபாண்டியன் செட்டியாரைநோக்கி அண்ணா! நம் குலதெய்வமாகிய
குமாரக்கடவுள் இருக்குந் தலம்யாதென்று வினவிக் குன்றக்குடி என
வழங்கும் மயூரகிரியென்றறிந்த வேந்தர், செட்டியாருடன் தம்மைச்
சார்ந்த பரிவாரங்கள் புடைசூழ குன்றக்குடிக்குச் சென்று மலையடி
வாரங்களில் அடர்ந்துள்ள காடுகளை வெட்டிச்சீர்செய்து மலைமேலே
றிச் சண்முகக்கடவுளைத் தரிசனஞ்செய்து இத்தகைய கருணாநிதியா
கியமுருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் இத்தலம் இவ்வாறு பொலி
விழந்திருப்பதேன் எனப் பலசோதிடர்களை வரித்து வினவி, சண்மு
கக்கடவுள் எழுந்தருளியிருக்கும பீடத்தின் கீழிட்டிருக்குந் தகடு

குப்புறக்கிடக்கிற தென்றறிந்து பரிசோதனைசெய்து அங்ஙனந்தக டுகிடப்பக் கண்டெடுத்துச் செவ்வைசெய்து பிரதிட்டை பண்ணு வித்து மண்டபம் மதில் கோபுரமுதலான திருப்பணிகளும் பிறவும் புதுக்கிக் கும்பாபிடேகமுஞ் செய்வித்து செம்பொன்மாரிமுதலிய கிராமங்களை அளித்தும் மருதாபுரி என்னுந் தடாகமுண்டாக்கியும் தென்னந்தோப்புக்கள் வைத்தும் வெள்ளிமயில் வாகனம் பொற்கவசம் திருத்தேர்முதலியன செய்வித்தும் தைப்பூசத்திருவிழாவாதிய சிறப்புக்கள் பெருமைபெறச் செய்தும் சண்முகக்கடவுள் திருவடிக்கணிடையறாத பேரன்புடன் அத்தலத்திலரண்மனையுங் கட்டுவித்து அங்கு அமருநாளில் அவர்வேண்டுகோளால் சாந்துப்புலவர் மயூரகிரிக் கோவையென்னும் அரியநூலைப் பாடினரென்ப.

இப்புலவர் மருதுபாண்டியன் சண்முகக்கடவுளுக்குச் செய்த முற்கூறிய திருப்பணிமுதலான தருமங்களையும் புலவர்கட்குப் பெருநிதிவழங்கிய அருமையையும் பலவண்ணமாகப் பாராட்டிக்கூறியிருப்பனயாவும் மிகவும் வியக்கற்பாலவாம். அவைகளைத் தனித்தனியெழுதப் புகின்விரியுமென்றஞ்சி எழுதிற்றிலேன். ஆனாலும் ௧, ௧௨, ௯௧, ௮௧, ௧௧௮, ௧௫௩, ௧௫௮, ௧௬௬, ௧௬௮, ௨௦௦, ௨௭௩, ௯௦௩, ௪௧௭, ௫௨௪, ௫௩௫ என்னும் இலக்கச்செய்யுள்களைப் படித்தால் நன்குணரலாகும். அன்றியும் அக்காலத்து மருதுபூபதியாற் றருமகர்த்தா ஆக்கப்பெற்றுத் திருவண்ணாமலையாதீனத்தைச் சார்ந்தவராயிருந்த சங்கரலிங்கமுனிவருடைய ஈகைஅன்புமுதலியபெருமையை ௭, ௪௭௧-ஆம் பாடல்களிலும், மருதுபூபதிக்குச் சகோதரபாந்தவ்யமுள்ளவராகிய காடன்செட்டியாருடைய மண்டபப்படிச்சிறப்பை ௪௦௨-ம் பாடலிலும், பாராட்டிக்கூறியிருக்கின்றனர். இவர் இக்கோவையில் ஏனையநூல்களிற் காணப்பெறாத அரியதுறைகளையெல்லாம் அமைத்து அதிவிசித்திரகரமான சொற்சுவை பொருட்சுவைநிரம்பிய யமகம் திரிபு சிலேடை அடிமடக்குமுதலிய கவிகளையும் கூடசதுக்கமுதலிய சித்திரகவிகளையும் அமைத்துப்பாடியிருப்பதுபோல வேறெவரும் செய்திலர் என்பது ஒருதலை.

(இன்னும் வரும்.)

உ

திருச்சிற்றம்பலம்.

தலமுறையாராய்ச்சி.*

உலகமும் பல்லுயிரு மோன்றிநிறைந் தோங்கி
இலகுந் சிவனேம் மிறை.

சிவபெருமான் தனதுடைப்பொருளை ஜீவான்மாக்கள் தமதுடைப் பொருளாகக்கொண்டு மகிழ்வுற்று வாழுமாறு கட்டளையிட்டருளியவாறு போல, ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைசாமித் தேவர் கோமானவர்கள் தனதுடைப்பொருளைக் கொண்டு இந்த நான்காஞ் சங்கம் நிறுவி அதனங்கத்தினர் யாவரும் தமதுடைப் பொருளாகக் கொண்டு மகிழுமாறு செய்வித்து விளங்கிவருமிச்சங்கத்தின் ஏழாவது வருஷமகோற்சவ காலத்திலே தமியேனையுமோர் பொருட்டுச் செய்து வியாச மொன்று எழுதி வாசிக்கும்படி பணித்த வியாசத்தையே வியாசமாகக்கொண்டு இத்தலமுறை யாராய்ச்சியை எழுதி வாசிக்கத் துணிந்தேன்.

கடல் புடை சூழ்ந்த இந்நிலவுலகிலே, புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலே, ஸ்ரீகண்ட சரீரசரீரியாய் விளங்கும் சிவபெருமான் அநாதிமல பெத்த சித்துருவாகிய ஆன்மாக்களுக்கு மலநீக்கமும் சிவத்துவவிளக்கமும் சித்திக்கும்பொருட்டுத் தமது பெருங்கருணைத் திருவருளினாலே எங்கும் வியாபகமாய் நிற்பினும் புறத்திலே சிவலிங்க முதலிய திருமேனியை ஆதாரமாகக்கொண்டு தயிரினெய்போல விளங்கும் பல தலங்களுள்ளும் மூவராலும் தேவாரத் திருப்பதிகங்கள் பெற்று விளங்கும் தலங்கள், இருநூற்றெழுபத்து நான்கு. அத்தலங்களின் பெயர்களை அவ்வத்தலங்களின் ஐதிகங்களைக்கொண்டு ஆராயின் எல்லாம் காரணப்பெயராகவே காணப்பெறுகின்றன. அவை வருமாறு:—

அகத்தியன் பூசித்த தலம் அகத்தியான் பள்ளி.

சிவபெருமான் திரிபுரதகனஞ் செய்யும் பொருட்டுத் தேவர்கள் சமைத்த தேரில் எழுந்தருளினபோது அத்தேவர்கள் விநா

---

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச்சங்கத்து, ஏழாம் வருஷோற்சவ தினமொன்றில் ஆசிரியராற் படிக்கப்பெற்றது.

யக மூர்த்தியை நினையாதகாரணத்தால் தேரின் அச்சு இற்று, முறிந்த தலம் அச்சிறுபாக்கம்.

"யான்பரம்" "யான்பரம்" என்று தர்க்கித்த பிரமவிஷ்ணுக்களுக்கு மத்தியில் அவர்கள் அன்னமாயும் பன்றியாயும் தேடிக்காணமல் அகந்தை தீர்ந்து திகைத்து நிற்கும்படி அக்கினிமலையாய்த் தோன்றி அண்ணாந்திருந்த தலம் திருஅண்ணாமலை. அருண நிறமாகிய ஜோதிமலையாய்த் தோன்றியதால் அருணாசலம் என்றும் பெயர். அருணம் - சிவப்பு.

அம்பரா சூரனைக்கொன்ற பாவந்தீர மாகாளி பூசித்த தலம் திரு அம்பர் மாகாளம். மகாகாளருஷி பூசித்ததால் மாகாளம் என்பதும் ஐதீகம். இவ்வம்பர்த் தலத்திலுள்ள பெரிய மாடக்கோயில், திருவம்பர் பெருந்திருக்கோயில்.

அரசடியைத் தமக்கிடமாகக் கொண்டிருந்த தலம் அரசிலி. அரசு=அரசமரம். இலி=இடமாகவுடைய தலம்.

மகாவிஷ்ணு, வராகரூபமாய் கருப்பகிரகத்தில் துவாரஞ்செய்து நுழைந்து ஸ்ரீமுஷ்டத்தில் வெளிவந்த தலம் அரித்துவாரமங்கலம். இது வழங்கப்பெறும் பெயர். இதுகாரணம் பற்றியே அரிதைப் பெரும்பாழி என்பது மற்றோர் பெயர். இது பதிகங்களில் திரு அரதைப் பெரும்பாழி யென மருவிக்காணப் பெறுகின்றது.

அரிசெல்லென்று பணிந்த நதி அரிசெல்லாறு, அதன் கரையிலுள்ள புத்தூர் அரிசெற்கரைப் புத்தூர். இது பதிகங்களில் அரிசிற்கரைப் புத்தூர் என மருவிக்காணப் பெறுகிறது.

ஓர் சிவாசாரியரது மனைவியாகி "அவள் இவள்" என்று சுட்டிக் காட்டிய தலம் அவளிவணல்லூர்.

பிரளய காலத்தும் விநாசமில்லாத தலம் அவிநாசி.

கருவத்தோடு ஆகாயமார்க்கமாய்ச் சென்ற ஓர் காந்தருவனது தேர் அழுந்தச்செய்த தலம் திரு அழுந்தூர். தேரழுந்தப்பெற்றதால் தேரழுந்தூர் என வழங்கப் பெறுகின்றது.

அறையின் மேலுள்ள தலம் திருஅறையணிநல்லூர்; அறை= பாறை.

அன்பிற்கு இல்லமாகியும் ஆல் தலவிருக்ஷமாயுமுள்ள தலம் திரு அன்பிலாலந்துறை. அன்பு=பிரேமை - இல்=இடம். (பிரேமபுரி.)

பிருகு முனிவர் துருவாசமுனிவரது சாபத்தால் ஆட்டுத்தலையும் ஆனையுடலும் பெற்றுப் பூசித்த தலம் திரு ஆடானை.

சோழாந்தக பாண்டியனுக்காக சிவபெருமான் ஆப்பினிடத்தில் தோன்றியருளிய தலம் திரு ஆப்பனூர்.

பசுத்தொழுவில் இடையன் பால் கறந்துகொண்டு போம்பொழுது வழியில் தினந்தோறும் பால் கவிழ்ந்து கொண்டு வருதலையுணர்ந்து வாளாலோச்ச அவ்விடத்தில் சிவபெருமான் தோன்றிய தலம் திரு ஆப்பாடி.

பசுக்கள் பூசித்துக் கொம்புகள் பெற்று தங்களுக்குத் தாயகமாகப் பெற்ற தலம் திரு ஆமாத்தூர். (கோமாதுருபுரம்.)

இலக்குமி பூசித்திருந்த தலம் திருவாரூர்.

வருணன் ஒருகாலத்து திருவாரூர் நகர்மீது அனுப்பிய பரவை (கடல்) புண்டு இரக்ஷித்த தலம் திருவாரூர்ப் பரவையுண்மண்டளி.

ஆல் தலவிருக்ஷமான தலங்கள் திருவாலங்காடு, திரு ஆலம்பொழில்.

பசுப்பூசை செய்து முத்தி பெற்ற தலங்கள் திருவாவடுதுறை (கோமுத்தி க்ஷேத்திரம்) திரு ஆவூர்.

ஆனை பூஜை செய்தவனம் திருவானைக்கா.

இடும்பன் பூசித்ததலம் திரு இடும்பாவனம்.

காட்டினிடையேதோன்றியதலம் திருஇடைச்சுரம். சுரம்=காடு.

விநாயகதலமாகிய திருவலஞ்சுழிக்கும், சுப்பிரமணியதலமாகிய திருவேரகம் சுவாமிமலைக்கும், தக்ஷிணாமூர்த்திதலமாகிய ஆலங்குடிக்கும், அம்பிகைதலமாகிய மாயூரத்திற்கும், சண்டேசுரர்தலமாகிய

திருச்சேய்ஞ்ஞலூருக்கும், நவகன்னியர் தலமாகிய திருக்குடந்தைக் கீழ்க்கோட்டத்திற்கும் இங்ஙனமாக இன்னுமற்றுமுள்ள தலங்களுக்கும் இடையில் விளங்குவதும் மருது தலவிருக்ஷமாயுமுள்ள தலம் திருவிடைமருதூர்.

வெண்ணையாற்றினிடையிலுண்டான தலம் திருஇடையாறு.

இந்திரன்பூசை செய்ததும் மலையிலுள்ளதுமான தலம் திருஇந்திரநீலப்பருப்பதம்.

ஸ்ரீ இராமர் பூசித்ததலம் திருஇராமனதீச்சுரம்.

இராவணாதிகளைக் கொன்றபாவந்தீர ஸ்ரீ இராமர் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து பூசித்ததலம் திரு இராமேச்சுரம்.

பூளை தலவிருக்ஷமான தலம் திருஇரும்பூளை-(காசியாரணியம்.)

இரும்பை-(பாம்பு) அரிஹர புத்திரராது சேனைத்தலைவராகிய மாகாளர் பூசித்ததலம் திருஇரும்பைமாகாளம்.

இனன்-(சூரியன்) உம்பல்-(உட்பர்யானை) பூசித்ததலம், இனனும்பர்; இது இன்னம்பர் எனமருவித் தேவாரப்பதிகங்களில் காணப்பெறுகின்றது.

ஸ்ரீ இராமரை உசாவியனுக்கிரகித்ததலம் திருஉசாத்தானம்.

திருநந்திதேவராது வாயிலிருந்து ஜலம் எப்பொழுதும் ஊறிவிழுந்துகொண்டிருக்குந்தலம் திருவூறல்.

தக்கோலம் தலவிருக்ஷமானதால் தக்கோலம் என்றுபெயர்.

வேள்விக்குடியில் சிவபெருமான் வேள்வியியற்றத் திருமணஞ்செய்துகொண்ட இராசகுமாரன் மனைவியுடன் தன் நகருக்குச்செல்லும்போது சிவபெருமான் அவனுடைய அம்மானைப்போல எதிர்கொண்டு அழைத்ததலம் திருஎதிர்கொள்பாடி.

வெள்ளெருக்கங்காடு தலவிருக்ஷமானதும் வியாக்கிரபாதர் பூசித்ததுமான தலம்-திருவெருக்கத்தம்புலியூர். (அத்தம்-காடு.)

சூரபதுமனையறியாது தேவர்கள் எறும்பு உருவங்கொண்டு பூசித்ததலம் திருஎறும்பியூர்.

சம்பந்தமூர்த்திநாயனார் சமணர்களுடன்வாதுசெய்தபோது "வாழ்க அந்தணர்" என்னுந்திருப்பாசுரம் எழுதிவிட்ட ஏடுவைகையாற்றின் நீரை எதிர்த்துச்சென்று தன்னைகத்துக்கொண்ட தலம் திருவேடகம்.

ஐந்து தீர்த்தங்களையுடைய தலம் திரு ஐயாறு (பஞ்சநதம்.)

ஓணன் காந்தன் என்னும் அசுரர்கள் பூசித்துப் பேறுபெற்ற தலம் திரு ஓணகாந்தன்றளி.

சிவபெருமான் வேதத்தின்பொருளை முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் அருளிச்செய்ததலம் திருவோத்தூர்-ஓத்து வேதம்.

கஞ்சன் பூசித்ததலம் திருக்கஞ்சனூர். கஞ்சன்-பிரமன்.

கடம்புதலவிருக்ஷமான தலம் திருக்கடம்பந்துறை - (கடம்பர் கோயில் என வழங்குகின்றது.)

தேவர்கள் அமிர்த கடத்தைவைத்துப் பூசித்த தலம் திருக்கடவூர்.

கடுவாய் என்ற நதியின்கரையிலுள்ள புத்தூர்: திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்.

பிரமன் சிரசைக் கண்டித்த தலம் திருக்கண்டியூர்.

தேவேந்திரன் சாபம் நீங்கப்பெற்று ஆயிரம் கண்பெற்ற தலம் திருக்கண்ணாயிரர் கோயில். இது கண்ணார்கோயில் எனமருவியது. இதனை.

"முன்னொரு காலத் திந்திர னுற்ற முனிசாபம்
பின்னொரு நாளவ் விண்ணவ ரேத்தப் பெயர்வெய்தித்
தன்னரு ளாற்கண் ணாயிர மீந்தோன் சார்பென்பர்
கன்னியர் நாளுந் துன்னமர் கண்ணார் கோயிலே"

என்னும் தேவாரப் பாசுரத்தாலறியலாகும். இத்தலம்: திருமால் குறுமாணி உருவங்கொண்டு மாவலிபால் மூவடிமண்ணேற்ற பாவந்தீரப்பூசித்த காரணத்தால் குறுமாணிக்குடி என்று வழங்கப்பெறுகின்றது. இதனை.

"மறுமாணுருவாய் மற்றிணையின்றி வானோரைச்
செறுமாவலிபாற் சென்றுலகெல்லா மளவிட்ட
குறுமாணுருவன் றற்குறியாகக் கொண்டாடுங்
கறுமார்கண்டன் மேயதுகண்ணார் கோயிலே" என்னும் தேவாரப் பாசுரத்தானறியலாகும்.

கரவீரம் தலவிருக்ஷமான தலம் திருக்கரவீரம்.

ஒரு பெண்ணின் கருவைக்காத்ததலம் திருக்கருகாவூர். கரு-கருப்பம்.

சற்குணன் என்னும் அரசன் பூசை செய்து கருவைப் போக்கிக் கொண்ட தலம் திருக்கருவிலி. கரு-பிறவி; கருப்பவாசனே.

அங்ஙனம் கருவை யொழித்துக் கொண்ட சற்குணன் பூஜை செய்து பேறுபெற்ற தலம் திருக்கருக்குடி.

விசித்திராங்கதன் மனைவி தலங்கள் தோறும் சென்றும் பன்னிரண்டு வருடம் கருப்பறியா திருந்தும் இத்தலத்தை யடைந்தவுடன் கருப்பறிய லுற்ற தலம் திருக்கருப்பறியலூர்.

கழியின்கண்ணுள்ள பாலை தலவிருக்ஷமானதலம் திருக்கழிப்பாலை. கழி - கடற்கரை.

கிரேதாயுகத்தில் சண்டன் பிரசண்டன் என்ற கழுகாசர்களும் திரேதாயுகத்தில் சம்பாதி சடாயுஎன்ற கழுகாசர்களும், துவாபரயுகத்தில் சம்புகுத்தன் மாகுத்தன் சாபத்தால் கழுக்களான ருஷிகளும், கலியுகத்தில் பூடாவிருத்தர் சாபத்தால் கழுக்களான தவசிகளும், கழுவுருவோடு பூசித்துப் பேறு பெற்ற குன்றமாகலின் திருக்கழுக்குன்றம்.

களர் தலவிருக்ஷமான தலம் திருக்களர். களர்-களா.

கள்ளி தலவிருக்ஷமானதலம் கள்ளில்.

கற்பாறையின் மேலுள்ள தலம் திருக்கற்குடி.

உச்சிக்காலத்தில் பூசிக்கப்பெற்ற சழநாட்டரசனை உய்யக்கொண்ட காரணத்தால் உய்யக்கொண்டான்மலை என்றும் பெயர் (உஜ்ஜீவபுரம்.)

(இன்னும் வரும்.)

மு. சாம்பசிவ நாயனர்.

சென்னைப் பூர்வகலாப்ரசங்க நிகேதனத்தில்

ஓர் உபந்நியாசம்.*

பூர்வகலைகளான புராணேதிகாசங்களைப் பிரசங்கம் செய்வதான இந்நிகேதனத்தின் நோக்கம் மிகவும் சிலாக்கியம் ஆனதே. உலகில் ஒவ்வொரு ஜாதியிலும் பெரும்பான்மையோர் ஆஸ்திகர்களாகவே இருக்கின்றனர். மறுமையின்பத்துக்கு இம்மையே சாதனம் என்பதில் அனைவரும் ஒருப்படுகின்றனர். மறுமையின்பம் ஆகிய சாத்தியத்தின் விஷயத்தில் வேறுபடுவார் இல்லை. அதற்குரிய சாதன அளவில் மாத்திரம் ஜாதிக்குஜாதி நாகரிகநிலைமைக்கு ஏற்ப வேறுபாடு உளதாகி இருப்பது சகஜம். அவ்வந்நாகரிக நிலைமையில், ஜனசமூகங்களில் தெய்வஸ்வரூபம் எவ்வளவாக அவர்கள் புத்திக்கு எட்டுகிறதோ, அவ்வளவிற்கு ஏற்றபடி அவரவர்களுக்குத் தனித்தனியாக வேதங்களும்புராணேதிகாசங்களும் ஏற்படுகின்றன.

வேதங்களில் உரைக்கப்படுவன கருத்துப்பொருள்கள்: புராணேதிகாசங்களில் உரைக்கப்படுவன அக்கருத்துப் பொருள்களை விளக்குவனவான காட்சிப்பொருள்கள். வேதங்கள் உரைப்பது பண்பு: புராணேதி காசங்கள் உரைப்பது பண்பி. அது சூட்சமம், இது பிண்டம். பிண்டத்தைக் கண்டே சூட்சமத்தை அறியவேண்டும். பண்பியைக் கொண்டே பண்பை அறியவேண்டும். காட்சிப் பொருள்இன்றிக் கருத்துப் பொருளை அறிவது இல்லை. புராணேதிகாசங்கள், வேதத்தில் உள்ள உண்மைகளைச் சரித்திர ரூபமாக விளக்குமவை. புராணேதிகாசங்களான வாயில்களை அடையாமல் வேதமாகிய ரத்நாகரத்தை அடையுமாறு இல்லை.

தென்னாட்டில் உள்ள திராவிடர்கள் அனுசரிப்பது கேவலம் திராவிடர்களுடைய புராதன மதக்கொள்கையும் அன்று, கேவலம் ஆரியர்களுடைய நவீனமதக்கொள்கையும் அன்று. காலாந்தரத்

---

*இவ்வுபந்நியாசம், சென்னை இலிங்கசெட்டி வீதியில் பூர்வகலாப்பிரசங்க நிகேதனம், பன்னிரண்டாவது வருஷோற்சவ காலத்தில் ஸ்ரீமத். தி. செல்வக்கேசவராயமுதலியாரவர்கள் M. A. செய்தது.

தில் அவ்விருவர் கொள்கைகளும் கலத்தலாகி ஸமரஸமாக ஏற்பட்டதே நெடுங்காலமாகத் திராவிடர்கள் அனுசரிக்கின்ற மதம்.

பிற்கால ஆரியமதத்தில் வேதம் எல்லார்க்கும் பொதுவாயினும், சைவர்களுக்கு ஸ்காந்தமும் வைணவர்களுக்குப் பாகவதமும் புராணரத்நங்கள் ஆயின. இராமாயணமும் பாரதமும் ஆன இதிகாசங்கள் இரண்டும் சமயவேறுபாட்டில் உட்படவில்லை. ஸம்ஸ்க்ருதத்தில் அமைந்திருக்கும் வேதமும் புராணமும் இவர்கள் அறியலாகாமையால், இவர்களுக்குத் தங்கள் பாஷையில், ஸம்ஸ்க்ருத வேதஸாரமான வேதங்களும், புராணங்களின் மொழிபெயர்ப்பும், சொந்தமான புராணங்களும் ஏற்படுவன ஆயின. தேவாரம் திருவாசகம் முதலானவை சைவவேதம். நாலாயிரப்பிரபந்தம் வைணவவேதம். பெரியபுராணம் சைவத்துக்கும, அரிசமய தீபமான குருபரம்பராப்ரபாவம் வைணவத்துக்கும் திராவிடபுராணங்கள் ஆயின. சித்தாந்த சாஸ்திரங்கள் சைவத்துக்கும், அஷ்டாதசரஹஸ்யங்கள் வைணவத்துக்கும் பிரமசூத்திரங்கள் ஆயின. திருக்குறள் தமிழ்நாட்டுக்கீதையாக விளங்குகின்றது.

திருவிளையாடற்புராணம, ஆலாஸ்யமாகாத்மியமாய், ஸ்காந்தபுராணத்தின் ஒரு பாகமே ஆயினும், எல்லாம் செந்தமிழ்நாடான மதுரையின்கண் நிகழ்ந்தனவாகக் கொள்ளப்படும் சிவசரித்திரம் ஆகையால், தென்னாட்டுச் சைவர்களுக்கே உரியதாகும். ஆகவே, ஸ்காந்தத்தோடு பெரியபுராணமும் திருவிளையாடற்புராணமும் சைவர்களுக்கு இன்றியமையாதனவும்,பாகவதத்தோடு குருபரம்பராப்ரபாவம் வைணவர்களுக்கு இன்றியமையாதனவும், பாரதராமாயணங்கள் இருவர்க்கும் பொதுவும் ஆயின. இவைகளை ஒன்றின்பின் ஒன்றாகப் பிரசங்கம் செய்துவருவதே இந்நிகேதனத்தின் நோக்கம்.

புராணேதிகாசங்கள், அவையவை ஏற்படுகின்றகாலத்தில், ஜனங்களுடைய தெய்வங்கொள்கை ஒழுக்கம் நாகரிகநிலைமை முதலான அமிசங்களைப் பிரதிசாயலாகக் காட்டும் கண்ணாடிகளே ஆயினும், அவை, உள்ளபடி நடந்தவற்றை உள்ளபடியே உரைக்கும் உண்மைச் சரித்திரங்களும் அல்ல, இல்லாதவற்றை உள்ளபடியே உரைக்கும் பொய்ச்சரித்திரங்களும் அல்ல. மாணாக்கருடைய கையெழுத்து

செவ்வி அடையுமாறு ஆசிரியன் எழுதிக்கொடுக்கும் மேல்வரிச்சட்டம்போலவும், சித்திரம்எழுதப்பழகுவாருடைய சித்திரம் செவ்வியடையுமாறு சித்திரவோடாவி எழுதிக்காட்டும் சித்திரம் போலவும், மக்களுடைய ஒழுக்கம் முதலியவை செவ்வி அடையுமாறு புராணேதிகாசங்களின் ஆசிரியர்கள் அவ்வொழுக்கம் முதலியவற்றின் உத்தமபாவங்களைக் கதையோடு கலந்து புனைந்துரைப்பர். இங்ஙனம் உத்தமமான பாவங்களைக் கதையோடு கலந்து புனைந்துரைக்கும் திறமே கவிகற்பனைக்கு ஆதாரம். உத்தமபாவமான இந்தப் பாவிகத்தை வாங்கிவிட்டால், புராணேதிகாசங்கள் எல்லாம் உப்பில்லாத உண்டியே: ஏனையரசங்களேறி யிருப்பினும் உப்பில்லாத பண்டம் குப்பையிலே: ஏனை அணிகள் அமைந்திருப்பினும், பாவிகம் இல்லாவிட்டால், புராணேதிகாசங்களுக்குக் காவியம் என்கிற பண்பு இல்லை. ஆகவே அப்புராணேதிகாசங்களால் மக்கள் உய்தலான உபாயம் உண்டாவது இல்லை. பாவிகமான உத்தமபாவங்கள் ஸம்பூரணமாக ஏறியிருப்பதே நம்முடைய திராவிட புராணங்கள் தமிழ் மக்கள் உய்வதற்கு உபாயமானகாரணம். இந்த உத்தமபாவங்களே வேதத்தில் பொதிந்திருக்கும் உண்மைகள். அந்த உத்தமபாவங்கள் ஆகிற தாட்டாந்தங்களுக்குச் சரித்திரங்கள் திட்டாந்தம் ஆதலால், திட்டாந்த தாட்டாந்தமாகப் புராணேதிகாசங்களை நமது வேதங்களோடு இயைத்து விளக்குவதே பௌராணிகர்கள் மேற்கொள்ளத் தக்க விஷயம்.

வேதசாரமான சைவ வைணவப் பிரபந்தங்களும், உலகநீதி உரைப்பனவாய் ஆத்திசூடி முதலாகத் திருக்குறள் ஈறுக உள்ள நூல்களும், கடினமான சந்திகளும் திரிசொற்களும் அமைந்து, ஸ்திரீகளும் பாமரர்களும் பாலியர்களும் எளிதில் உணரல் ஆகாதனவாக இருக்கின்றன. இந்த இலக்கியங்களுக்குக் கருவியான இலக்கணங்களும் சூத்திரரூபமாய் எளிதில் அறியலாகாதவை. இந்த இலக்கண இலக்கியங்களின் உரைகளும் கல்விமான்களுக்கே பயன்படுவன; பாலியர்களும் ஸ்திரீகளும் பாமரர்களும், உலகநீதிகளை உண்மைச் சரித்திரங்களாலும் கட்டுக் கதைகளாலும் விளக்கும் சிறியவசன நூல்களில் பயிற்சிசெய்து பாஷாஞானம் முதிரப்பெற்றால் அன்றி, மறுமைச்சாதனமான நூல்களில் பயிற்சிசெய்து உய்வது இல்லையே.

இன்னும் இம்மை யின்பத்துக்குச் சாதனமான மருத்துவம் பௌதிகம் இரஸாயனம் முதலிய சாஸ்திரங்களும் வசனத்தில் வந்தால் அன்றித் தமிழர்கள் அறிவு தெளிந்து நாகரிகம் உள்ளவர்களுடைய வரிசையில் தாழ்வு அடைந்தவர்களாகத் தள்ளிவிடப்படுவார்களே. இம்மை மறுமை ஆகிய இரண்டற்கும் சாதனமானவைகளை எளியநடையில் வசன ரூபமாகச் சிறிய புஸ்தகங்களாய் எழுதிப்பரப்புவது தமிழ்ப் பெரியோர்கள் மேற்கொள்ளத்தக்க கடமைகளில் முதன்மையான கடமை. அவப்பொழுதில் தவப்பொழுதாகப் பெரியோர்கள் மாத்திரம் புராண வைராக்கியம் அடைந்திருப்பது போதுமா? கிராமபாட சாலைகளிலும், தமிழ்ப் புலவரிடத்தும், நீதிநூல்களையும் அந்தாதிகளையும் நிகண்டுகளையும் இலக்கணச் சூத்திரங்களையும் குருட்டுப்பாடமாக நமது பிள்ளைகளைப் படிக்கவிட்டு, இன்னும் நம்மவர்களை அஞ்ஞான அந்தகாரத்தில் அடைத்து வைத்தால், ஞானோதயமாகி இம்மைப்பயிர் செழிப்புற்று மறுமைப்பயன் விளைப்பது எக்காலம்? நாம் மறுமைச் சாதனங்களை மாத்திரமே கவனிக்கிறோம். யூரோப்பியர்கள் அவற்றோடு இம்மைச் சாதனங்களையும் போற்றி வருதலால் அன்றோ நாகரீக நிலைமையில் நம்மினும் விஞ்சுவோர் ஆயினர்.

எல்லாருமே இக்காலத்தில் இங்கிலீஷ் பாடசாலைகளில் கல்வி கற்று அறிவு தெளிந்து இம்மை மறுமைப் பயன்களை அடைவது எளிதன்று. நம்முடைய ஏழைச் சிறுவர்கள் தங்கள் தங்கள் குலத்தொழிலில் பிரவேசிப்பதற்கு முன்னமே, அவர்கள் பொதுவாக அறிவு தெளிவதற்கும், தங்கள் தொழில்களைச் செம்மையாக நிர்வகிப்பதற்கும், தற்கால துரைத்தன ரீதிகளை அறிந்து இராஜவிசுவாசம் உள்ள நற்குடிகளாய் நாள்கழிப்பதற்கும் ஏற்ற விதமாக, அவர்களுக்கு வித்தியாப்பியாசம் செய்வித்தல், நாம் எல்லாரும் கடைப்பிடிக்கத்தக்க விஷயம். இதைத் திரவியநஷ்டமான காரியமாக எண்ணுதல் கூடாது.

வெற்றிலைத் தோட்டம் பயிரிடுகின்றவர்கள் கடைக்கோடியில் உள்ள கால்களை ஏழைகளுக்குக் கந்தாயம் சகாயமாக விடுகின்றனர். அதற்குக் காரணம், அந்தக்கால்களில் செம்மையாக நீர் பாய்ச்சிக்

குளிர்ச்சியாக வைத்திராவிட்டால், இடையில் உள்ள கால்கள் வெப்பம் தாங்க முடியாமல் நல்ல பலனைத் தரமாட்டா. அம்மை முதலிய விஷவியாதிகள் பரவுகின்ற காலத்தில் நம்முடைய வீடுகளை மாத்திரம் சுத்தியாக வைத்திருப்பது போதாது: அண்டை அயலில் உள்ள எளியவர்கள் வீடு வாயில்களையும் நம்முடைய செலவிலே சுத்தி செய்து வைக்கவேண்டும். நாமும் நம்முடைய சந்ததிகளும் க்ஷேமமாக வாழவேண்டுமானால், அயலில் உள்ளவர்களும் புத்திசாலிகளாய்த் தங்கள் தொழில்களை நாணயமாகச் செய்கின்றவர்களாய் இருத்தல் வேண்டும். நாலுபேர் க்ஷேமமாக இருந்தால் தான் நாமும் அவர்கள் நடுவே க்ஷேமமாக இருக்கலாம்.

யூனிவெர்ஸிட்டி என்னும் பரீக்ஷாசங்கத்தார் இத்தேசத்துப் பிள்ளைகளுக்கு சாஸ்திர ஞானம் அதிகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தால் சுதேச பாஷைகளைக் கற்பிப்பதை ஒருவாறு தளரவிடல் ஆனார்கள். இவர்களால் ஒருவாறு அபிவிர்த்தி அடைந்துவந்த தமிழ் இனிமேல் ஒடுங்கிவிடும் என்று நினைத்துப்பலர் பரிதவிக்கின்றனர். யூனிவெர்ஸிட்டி பரீக்ஷைகளால் தமிழ் அபிவிர்த்தி அடைவது இல்லை. பரீக்ஷை நிமித்தமாக அரைகுறையாய்ப் பாடங்களைப் படித்து, வித்தியார்த்திகள், பரீக்ஷையில் தேறியபின் தாங்கள் படித்த புத்தகங்களின் பெயர்களைத் தாமும் மறந்துவிடுவதை ப்ரத்யக்ஷமாகப் பார்க்கிறோம். தமிழில் அருமையான புஸ்தகங்களை அச்சிடுதற்கு அநுகூலிக்கின்றவர்களும், அவைகளை வாங்கிப் படிக்கின்றவர்களும் அங்கங்கே உள்ள தமிழ் அபிமானிகளே அன்றி, பரீக்ஷைகளில் தேறுகடை ஆகும் வித்தியார்த்திகள் அல்லர். பரீக்ஷைகளில் தேறுகடை ஆகின்றவர்களில் சிற்சிலர், தமிழ் அபிமானம் உள்ளவர்கள், தங்களால் ஆனகாரியங்களைச் செய்து, தமிழில் உள்ளபடியே அவசியமான சில குறைவுகளை நிறைவுறுத்திவருகின்றனர். இப்படிப்பட்டவர்கள் இனிமேலும் இருப்பார்களே அன்றிப் பூண்டற்றுப் போய்விடமாட்டார்கள். எத்தனையோ வேற்றரசர் காலம் எல்லாம் தப்பிப் பிழைத்துவந்த கன்னித்தண்டமிழ், தற்காலம் உரைநடை பழகி உரம்பெற்று வருதலால், இனி நாடு முற்றும் நடத்தலாகி நன்மை விளைக்கும் என்பது நிச்சயம்.

ஆயினும், மொழித்திறத்தின் முட்டறுத பாஷியரும், தமிழில் பயிற்சிபோதாத இங்கிலீஷ் வித்தியார்த்திகளும், நூல்கள் எழுதி அவசரப்பட்டு அச்சிட்டு, விநோத விளம்பரங்களால் அவைகளைப் பரப்பிவருதலால், உரைநடை ஒருவாறு [illegible]ழிவதாகக் காணுகின்றது. உரைநடை நூல்களில் தள்ளுபடிசெய்பவைகளைச் செய்யவும், கொள்ளத்தக்கவைகளைக் கொள்ளவும் தகுதியான சங்கம் ஒன்று ஏற்படுதல் வேண்டும். அப்படிப்பட்ட சங்கத்தால் அங்கீகரிக்கப்படுதலே கௌரவம் என்கிற நிச்சயம் உண்டானல், தமிழ்மரபு அழியாத வசன நூல்கள் பரவுதலாய்ப் பிற்காலத்தவர்களுக்கு வழிகாட்டிகளாக நிலை பெறும்.

விடுமுறை காலங்களில் (சீட்டு) கடுதாசி என்கிற சூதாட்டம் ஆடி அவனே இவனே என்றவர்களில் அனேகர் இப்பொழுது சில வருஷ காலமாகப் புராணப்ரசங்கம் கீதாகாலக்ஷேபம் முதலியன கேட்டு, அரியே சிவனே என்கின்றவர்களாய் மாறிவருவது, நல்ல காலத்துக்கே அறிகுறியாக இருக்கின்றது. ஆசாரிய புருஷர்கள் பலர் அரசகாரியம் பார்ப்பவர்களாக மாறிவிட்டமையால், இனி நாம், சுயாசாரியர்கள் ஆகி, சத்கிரந்த காலக்ஷேபம் செய்து, அதமர்களை மத்திமர்களாகவும், மத்திமர்களை உத்தமர்களாகவும், உத்தமர்களை உத்தமோத்தமர்களாகவும் செய்விப்பது நம்மிற் பெரியோர்களைப் பொறுத்த கடமை.

இப்படிப்பட்ட ப்ரசங்கசபைகள் பெரிய பட்டணங்களில் ஒன்று இரண்டாக இருப்பது போதாது. நாலைந்து தெருக்களுக்கு ஒன்றாகவும், சில இடங்களில் தெருவுக்கு ஒன்றாகவும், இவை பெருகுதல்வேண்டும். பகவத் விஷயங்களையும் புராணேதிகாசங்களையும் ப்ரசங்கிப்பதோடு, பொதுஜன நன்மையான விஷயங்களையும் அப்போதப்போது அதற்கு ஏற்ற புலவர்களைக்கொண்டு ப்ரசங்கம் செய்விப்பதும் நன்மைக்கே ஏதுவாகும்.

இவ்விதமான சபைகள் கூடுகின்ற இடங்களில் பொது ஜனங்களுக்கு உபயோகமான புஸ்தகசாலைகளை ஏற்படுத்தி, புஸ்தகங்களும் வர்த்தமானப் பத்திரிகைகளும் மாதாந்தரப் பத்திரிகைகளும் வாங்கி வைப்பதுவும், ஜனங்கள் இம்மையிலே ஆன்மார்த்தம் ஆனவைக

*

னோடு லௌகிக சித்தியையும் அடைவதற்கு அநுகுணம் ஆகும். இவ்வித சபைகளால் இன்னொரு நன்மையும் உண்டாகலாம். அதாவது, அங்கங்கே உள்ள ஏழைகளையும் மந்தமதிகளையும் அரித்தெடுத்து, அவரவர்களுக்கு ஏற்ற காரியங்களில் அவர்களை ஏவி, வறுமைத்துன்பத்தை ஒருவாறு பரிகரிக்கலாம்.

பூர்வகலாப்ரசங்க நிகேதனமானது பன்னிரண்டு பிராயம் உள்ளது ஆயிற்று. இனி இது மேன்மேல் வளர்ந்து, பல நன்மைகளைச் செய்து, வேறு பல சபைகளுக்குப் பிறப்பிடமாய், பல்லாண்டு பல்லாண்டாக வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

தி. செல்வக்கேசவராயன்.

கற்பு.*

அவையடக்கம்.

"இப்பியிடைத்தோன்றுமணி யினையிகழா தெடுத்துமண்ணி யேற்பார் செல்வர், அப்படியே கற்பினிலை யறிந்தகவி வரைமிவ் வவைக்கண் ணுத்ளூர், இப்பொழுதீ தென்னுரையென் றென்னுரையென் றெள்ளாமே யேற்பா ரென்றே, செப்புவது துணிந்தடைந்தேன் ஆதலினு லெனையிகழார் சீரி யோரே.

மகாகனம்பொருந்திய அக்கிராசனாதிபதியவர்கட்கும் ஏனைய புலவர் சிகாமணிகட்கும் வந்தனம். ஐயன்மீர்!

நுண்மாணுழைபுலம்படைத்த பேரறிவாளர் வீற்றிருக்கும் இப்பெருஞ்சபைக்கண்ணே எனது புன்மொழியை யேற்றவந்தது எனக்கே வியப்பையும் நகைப்பையும் தந்ததாயினும், இப்பியிற்றோன்றிய மணியை அதன் பிறப்பிடத்தி னிழிவுகருதி யிகழாது எடுத்து அலங்கரித்து அணிந்து மகிழும்செல்வரதியற்கைபோல, கற்பினுயர் வறிந்துள்ள வித்துவான்களும் இது சிற்றறிவுடைய என்னுரையென்றேனும் ஈது பொருட்செறிவில்லாத வெற்றுரையென்றேனும் இக

* இவ்வியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்து, ஏழாவது வருஷக்கூட்டத்தில், ஆசிரியரால், படிக்கப்பெற்றது.

பூரமே நவைதீர்த் தேற்றுக்கொள்வார் என்னுந் துணிவுடையேனுகி அஞ்சாது கூறவந்தனன். ஆதலின், இதனைற் சீரியோர் என்னைக் குறைகூறூர் என்பது இதன் கருத்து.

கற்பு என்பது முல்லை கல்வி கறபனை மதில் மகளிர் நிறை என் றற்றொடக்கத்த பலபொருள் குறிக்கும் ஒரு சொல்லாம். இவற் றுள் ஈண்டெடுத்துக்கொண்டபொருள் மகளிர் நிறையேயென்க.

உருவுங் குணனும் குலனும் ஆதியவற்றின் ஒப்புமைபெற்றுத் தன்னைக்கொண்ட நாயகன்மாட்டுக் கணந்தோறும் வளரப்பெற்று வந்து யாண்டுந் தொடர்வதாகிய உழுவலன்பின் பெருக்கமே கற்பெ னப்படுவதாகும்.

உண்மை மாத்திரையுணர்த்திப் பிழம்புணர்த்தப் படாதனவும்; உண்மையும் பிழம்பும் உணர்த்தப்படுவனவுமாகிய இருவகைப்பொரு ள்களுள், உண்மையுணர்த்தலல்லது பிழம்புணர்த்தப்படாதபெற்றிய பலவற்றுள் இதுவுமொன்றும்.

> * "ஒப்பு முருவும் வெறுப்பு மென்று
> கற்பு மேரு மெழிலு மென்று
> சாயலு நாணு மடனு மென்று
> நோயும் வேட்கையும் நுகர்ச்சியு மென்றுங்
> காவயின் வரூஉங் கிளவி யெல்லாம்
> நாட்டிய மரபி னெஞ்சுகொளி னல்லது
> காட்ட லாகாப் பொருள வென்ப."

என்பதனலறியற்பாற்று. பிழம்பு காட்டப்படாத இதனை யெவ்வா ற்றாற் றெள்ளிதினுணரத்தகுமெனின்,

> ‡ "சாவிற் சாதல் நோவின் நோதல்
> ஒண்பொருள் கொடுத்தல் நன்கினிது மொழிதல்
> புணர்வுநனி வேட்டல் பிரிவுநனி யிரங்கல்."

என்பனவாதிய நிகழ்ச்சியாற் றெளிவாமென்க.

இத்தகைய கற்பு எனற்குக் கற்றபடி நடத்தல் எனவும் பொ ருள்கூறுவர். என்னை? கன்னிப்பருவத்துத் தாய்தந்தை மூத்தோர்

* இறையனுரகப்பொருள் 14-ம் பக்கம்.
‡ ஷை 13-ம பக்கம்.

முதலிய பெரியோரானும், கடிமணமுடிந்தபிற்றை நாயகனானும், முதுமைப் பருவத்துப் புதல்வரானும் கற்பித்தபடியே யொழுகுதலாம். இதுபற்றியே "மங்கையரென்றுஞ் சுதந்தரமில்லார்" என்பர் பலலோர். மேற்கூறிய மூவகையோரும் பயிற்றுமுறைக்கேற்பவே மடவார் குணவிசேடமுறுதல் பெரும்பான்மையாதல் இன்றும் வெள்ளிடைமலைபோற் பரக்கக்காணலாம். இதுபற்றியன்றே "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்றார் ஔவைப்பிராட்டியார்.

ஒரு கற்புடைய மங்கைக்குத் தனது நாயகனே தெய்வமெனவும், கடவுளரைப்பேணுதொழியினும், நாயகனையே கடவுளாகக்கொண்டொழிக குறைபாடின்றெனவுங் கூறுவர். இதனை,

திருக்குறள்.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை."

எனவும்,

மணிமேகலை 159-ம் பக்கம். 101.

"கன்னிக் காவலுங் கடியிற் காவலும்
தன்னுறு கணவன் சாவுறிற் காவலும்
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோ னல்லது தெய்வமும் பேணாப்
பெண்டிர் தங்குடி."

எனவும்,

காசிகாண்டம்.

"கொழுநன் சொற்கட வாதுறை கொள்கையே
வழுவி னல்லறம் வான்றவ மாற்றுதல்
தொழுது தெய்வம் பராய்மலர் தூவுதல்
பழுதில் கற்புடைப் பத்தினிக் கென்பவே."

எனவும்,

ஷை 174.

"வாள்வி ழிக்குல மங்கைய ரன்பர்பொற்
றாள்வி ளக்கிய தண்புனல் கங்கையக்
கேள்வ ரேகிளர் தேவர்கள் மூவரில்
ஆளு மெய்ம்மை யடிகளென் றெண்ணுவார்."

எனவும், "குலமகட்குத் தெய்வங்கொழுநனே" எனவும் போதரும் பற்பல பிரமாணங்களாலறியத்தகும்.

இத்தகு மெய்க்குணங்கொண்ட பூவையர் தமது நாயகர் இன்புற்றுழித் தாமின்புற்றும், நாயகர் துன்புற்றுழித் தாம் துன்புற்றும் புனற் குளத்தகத்து ஆம்பலாதிய தேம்பொதி மலர்க்கொடிகளைப் போன்றும், தமக்கென ஒன்றும் வேண்டாது, தாமுண்பதும் உடுப்பதும் புனைவதும் யாவும் தம் நாயகர்பொருட்டேயாகவும், நாயகரையல்லாது பிறிதோர் உயிரின்றாகவும் கொண்டுறுவர். இக்கருத்துக்களை யெல்லாம்,

"காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவ
ராகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமா
மேகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையிற்
றோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்பத் துன்பங்களே."

எனத் திருக்கோவையாரினும்,

"சாமெனிற் சாத லேதந் தன்னவன் றணந்த காலைப்
பூமனும் புனைத லின்றிப் பொற்புடன் புலம்ப வைகிக்
காமனை யென்றுஞ் சொல்லார் கணவர்க்கை தொழுது வாழ்வார்
தேமலர்த் திருவோ டொப்பார் சேர்ந்தவன் செல்லல் தீர்ப்பார்"

எனச் சீவகசிந்தாமணியினும்,

"எப்பணியா லின்புறுவர் காதலராக் காதலரை
யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—யொப்ப
மனங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றே
கனங்குழை யார்கள் கடன்."

எனப் பெருந்தேவனார் பாரதத்தும் பரக்கக் காணலாம்.

ஒப்புயர்வில்லா உத்தமகுணமாகிய இக்கற்புநிலை வழாதபெண்டிரைத் தெய்வமாகவும் அந்நங்கையர் பெய்யெனப் பெய்யுமெனவும் அவரிட்ட கட்டளையை யெல்லாத் தேவரும் மறுக்காது நிறைவேற்றுவரெனவும் அவர் பிறந்தகுலமும் புகுந்த குடியும் சுவர்க்கம் புகுமெனவும் பலபிரமாணங்களுண்டு.

சிலப்பதிகாரம் 197-ம் பக்கம்.

"கடுங்கதிர் வெம்மையிற் காதலன் றனக்கு
நடுங்குதுய ரெய்தி நாப்புலர வாடித்
தன்றுயர் காணாத் தகைசால் பூங்கொடி

யின்றுணை மகளிர்க் கின்றி யமையாக்
கற்புக்கடம் பூண்டவித் தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்
வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தன் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டி ரிருந்த நாடு." எனவும்.

கந்தபுராணம்.

"காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்த மெய்யுரையி னிற்கும்
ஈண்டையுள தெய்வதமு மாமுகிலு மென்றால்
ஆண்டகைமை யோர்களு மவர்க்கு நிகரன்றே." எனவும்.

காசிகாண்டம்.

"கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்று ளோர்தம் மரபும் பெருந்தவக்
கற்பி னுட்கொண்ட காதல னுருயிர்ச்
சுற்றம் யாவும் துறக்கத்தி னெய்துமால்." எனவும்.

ஷை

"நண்ணு கற்புடை நங்கையர் சேறடி
மண்ணி னெவ்விடந் தோயினு மற்றஃ
தெண்ணு கின்ற தலங்க ளெவற்றினும்
புண்ணி யத்தல மென்று புகல்வரால்."

எனவும் வரும். இன்னும் இவைபோல்வன பலவுள. கண்ணிற்கு ஒளிபோலவே பெண்ணிற்குக் கற்பு இன்றியமையாதது. கற்புடைய பெண்பிறப்பு ஆண்பிறப்பினுமிக்கது. அதனிற்சிறந்த பேறு வேறில்லை. ஆதலினன்றோ, "ஆண்டகைமையோர்களுமவர்க்கு நிகரன்றே" எனவும் "பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந், திண்மையுண்டாகப்பெறின்" எனவுங்கூறுவராயினர். கற்புடை மங்கையர் பொற்புறு பெருமையின் மிகுதிபோலவே கற்பிலா மடந்தையர் சிறுமையும் அவர்க்கெய்துகின்ற துர்க்கதியும் நமதுபுலவர் பெருமக்கள் கூறுதொழிந்திலர்.

காசிகாண்டம்.

"பொருவில் கற்பின் வழீஇயபுன் மங்கைய
ருரிய மூன்று மரபினுள் ளோரையும்
வெருவந் தேங்கி விழுங்கி யுமிழ்கலா
எரியுந் தீநர கிற்குடி யேற்றுவார்."

என்பது முதலாக எண்ணிறந்தனவுண்டு. இஃதென்னை? இற்றைக்கும் இந்துமதத்தினர்க்குள் விவாககாலத்தில் நடைபெறும் அம்மி மிதித்து அருந்ததிகாட்டுதல் என்னுங்கிரியையை யறியாதாருமுண்டோ? அல்லது, கேளாதாருண்டோ? இதன்பொருள்யாது? கற்புநிலைதவறினால் அகலிகையைப்போற் கல்லுருவாகிக் காலான்மிதிக்கப்பட்டு இழிவெய்துவரெனவும், கற்பின் வழியொழுகினால் வசிஷ்ட பத்தினியான அருந்ததியைப்போல எல்லாராலுங் கைகூப்பித் தொழப்படுவரெனவும் புதுமணம்பெற்ற பூவைக்குக் காட்டிவைத்தலன்றோ இதன்பொருளாவது.

இக்கற்பு அறக்கற்பு மறக்கற்பு எனவிருவகைப்படும். இதனை
"மறுவில்கற்பின் வாணுதல்கணவன்"
என்புழி நச்சினார்க்கினியர் உரைத்த திருமுருகாற்றுப்படையுரையாலுணரத்தகும்.

அறக்கற்பு—சாபாநுக்கிரகசக்தி படைத்த கற்புடைமகளிர் தமக்கிடுக்கணுற்றுழியும், தம்செய்கையில் வீரந்தோன்றாது சாந்தமுங் கருணையுந் தோன்றுமாறு நடத்தலாம். இவ்வாறுநடந்தோர் சீதாபிராட்டி முதலியராவர். இராவணன் சீதாதேவியை வஞ்சித்துத் தூக்கிவந்த காலத்தும் பின்னர் அசோகவனத்திலிருத்திச் சோகமுறுமாறு கொடுமொழிகூறிய காலத்தும் கோபாவேசங்கொண்டு சாபமிட்டுச் சுட்டெரிக்காது மனம்புகைந்ததாயினும் நாயகன் நினைவன்றிப் பிறிது கருதாமல் நலம்போதித்த துலகறிந்ததொன்றன்றோ. கொடுஞ்சொற்கூறிய இராவணனுக்கு உத்தரங்கூறுமிடத்து.

சுந்தரகாண்டம் நிந்தனைப்படலம். 59-ம்கவி.

"கடிக்கும்வல் லரவுங்கேட்கு மந்திரங் களிக்கின்றோயை
அடிக்குமீ தடாதென் றுன்ற வேதுவோ டறிவு காட்டி
யிடிக்குந ரில்லை யுள்ளா ரெண்ணியதெண்ணி யுன்னை
முடிக்குந ரென்ற போது முடிவன்றி முடிவ துண்டோ."

என்பன வாதியாகப் புத்திகூறியதும், நிகழ்ந்தமைகருதித் தான் இருந் துமிடத்துத் தன்னுயகனைப்பற்றி நினைத்து.

உருக்காட்டுபடலம்.

"பொறையிருந் தாற்றியென் னுயிரும் போற்றினேன்
அறையிருங் கழலவற் காணு மாசையால்
நிறையிரும் பல்பக லிருதர் நீணகர்
சிறையிருந் தேனையவ் வமலன் நீண்டுமோ"

எனக்கூறியதையும்: ஆஞ்சனேயரிடத்துப் பிராட்டியார் கூறுமி டத்து.

சூளாமணிப்படலம்.—18-ம்கவி.

"அல்லன் மாக்க ளிலங்கைய தாகுமோ
எல்லை நீத்த வுலகங்க ளியாவுமென்
சொல்லி னற்சுடு வேனது தூயவன்
வில்லி னாற்றற்கு மாறென்று வீசினேன்"

சூளாமணிப்படலம் 19-ம்கவி.

வேறு முண்டுரை கேளது மென்மையோய்
ஏறு சேவகன் மேனியல் லாலிடை
ஆறு மைம்பொறி நின்னையும் ஆணெனக்
கூறு மிவ்வுருத் தீண்டுதல் கூடுமோ"

எனவலியும் நிறையுந்தோன்றக் கூறுதலும் நோக்கில் தெற் றெனப் புலப்படும். நளாயினி, அனசூயை, முதலிய மாதர்சிகாமணி யெல்லாம் அறகற்புடையாரே.

மறக்கற்பாவது—பத்தினிப் பெண்டிராவார் தமதுசெய்கையில் வீரந்தோன்றப்புரிதலாம். கண்ணகிமுதலியோர்செயல்கள் இப்பகுதி யனவேயாம். என்னை?

பொற்கொல்லன் வஞ்சனையால் தன்னுயகனை கோவலன் கள் வனாகக் கருதப்பட்டு உயிரிழந்தமையறிந்த (அவன்மனைவி) கண்ண கி வீராவேசங்கொண்டு பாண்டியன் கடைத்தலை குறுகிநின்று வாயி ல்காப்போரை நோக்கி,

சிலப்பதிகாரம் பக்கம், 432, 433.

“வாயி லோயே வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்
திறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
யிணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்
றறிவிப் பாயே யறிவிப் பாயே.”

என்றதும், வாயில்காப்போர் இவளைப்பற்றி மன்னவனுக்கு அறிவுறுத்துகையில்,

“அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீட மேறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை யிறைவனை
யாடல்கண் டருளிய வணங்கு சூருடைக்
கானக முகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலுஞ் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளே.”

என வீரப்பெருக்கந் தோன்றக் கூறுதலும், வேந்தனாணையால் உட்புக்கபின் செழியனை நோக்கி,

“தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பி னிமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் டீர்த்தோ னன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்
அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே யவ்வூர்
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி யூழ்வினை துரப்பச்
சூழ்கழன் மன்னா நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்பு பகர்தல் வேண்டிநின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்ப தென்பெயர்”

*

எனச் சிறிதும் அச்சமின்றிக் கூறியதும் பிறவும் மறத்திறப்பெருக்கத்தை விளக்கி நிற்றலான், இத்தகுகற்பெலாம் மறக்கற்பென்று கூறப்படும்.

இதனுள் எதிர்த்தாரைக் கொல்லுங் கதிர்க்கோற் கொற்றவன் எதிரேநின்று அச்சமென்பதோரணுத்துணையுமின்றித் தேராமன்னா வெனவிளித்ததன்றியும், புறவைப்புரந்ததும், பசுவின்கன்றைக்கொன்ற தன்னருமந்தமைந்தனைத் தேர்க்காலில் வைத்தரைத்து மாய்த்ததுமான பொன்னித்துறைவர் நீதியையெடுத்தோதியதும் மிகவுங்கவனித்தற்பாலவாம். காமத்தாற் றன்னைத் தீண்டவந்த வேடனைத் தனது கற்புத்தீயாற் சுட்டெரித்த தமயந்தியும் மறக்கற்புடையளேயாவள்.

நைடதம் பரிவுறுபடலம் (24)ம்கவி.

"வெய்யவரவின் பகுவாயின் விடுத்தமடமானெழினோக்கி
மையல்கூர்ந்த நெஞ்சினனாய் வரிவிற் றடக்கை வயவேடன்
தொய்யின் முலைமேற் புல்லுதற்குத் தொடராத் துஞ்சாவருங்கற்
றையன் முனிந்து நோக்குதலுஞ் சாம்பராயிற் றவனுடலே.[பின்

என்பதனாற்காண்க.

(தொடரும்.)

இங்ஙனம்,

M. K. M. அப்துல்காதிரு ராவுத்தர்,

மதுரைத்தமிழ்ச்சங்கவித்வான்.

அபிப்பிராயபேதம்.

ஏனையஜீவராசிகளைவிட மனிதன் சிறந்தவனானது அவனுடைய பகுத்தறிவினால் தான். விதிவிலக்குகளை உணரச்செய்யும் அறிவுக்கே பகுத்தறிவு என்றுபெயர். மனிதன் நீங்கலாக ஏனைய ஜீவராசிகளுக்குள்ளே அவ்வப்பிராணிகள் தத்தம் இனத்தின் பொதுலட்சணமாயிருக்கும் இயற்கையறிவுக்கேற்பக் கருமங்களைச்செய்துவருகின்

றன. மனிதனோ தனது பகுத்தறிவுக்கேற்றபடி காரியங்களைச் செய்துவருகிறான். அவரவர்களின் பகுத்தறிவின் இயக்கத்துக்கேற்றவாறு அபிப்பிராயங்களும் அமைகின்றன. பகுத்தறிவினியக்கத்தை அதிகமாயடையப்பெறாதவர்கள் பெரும்பாலும் நாகரிகமற்றமிலேச்சர்கள். அவர்களது செய்கைகளெல்லாம் வெகுவாய் விலங்கு, புள் இவற்றைப்போல் தாங்கள் சேர்ந்திருக்கும் இனத்தின்செய்கைகளாயிருக்கும். மனிதனுடைய பகுத்தறிவின் இயக்கம் அவன் சார்ந்திருக்கும் இனத்துக்கேற்றபடியேயிருக்கிறதென்றும், அவனுக்கு இயற்கையிற் பகுத்தறிவென்பது கிடையாதென்றும் சிலமனோதத்துவலட்சணசாஸ்திரிகள் வாதிக்கிறார்கள். அவர்கள் அங்ஙனம்கூறுவது பொருந்தாது. ஆயினும் அவர்கள் உரைப்பது முற்றும் அபத்தமென்று கூறுவதற்கிடமில்லை. மனிதனுடையஇயற்கையறிவு வெகுவாய் இனத்துக்கேற்றபடி திருந்துவதாயிருக்கிறதென்பது வாஸ்தவந்தான். இது காரணமாகத்தான், சீர்படவேண்டிய ஒவ்வொருவனும் சாதுசங்கத்தை மேவவேண்டுமென்றும், நல்லாரோடிணங்கவேண்டுமென்றும், தீயாரைவிட்டகலவேண்டுமென்றும்ஆன்றோர்கூறியுளார். பகுத்தறிவு பழக்கத்துக்கேற்றபடி திருந்துகிற காரணத்தினாலேயே பகுத்தறிவெனுமொருபொருள் இயற்கையில் மனிதனிடத்து இல்லையென்று சாதிப்பது வாதத்துக்கு நில்லாது. ஏனெனில் "இணக்கமறிந்திணங்கு." என்று கூறியநற்போதவசனத்தின்படி இன்னதை நல்லிணக்கமென்றும் சங்கமென்றும் இன்னதை அஃதன்றென்றும் பிரதமத்தில் அறிந்து கொள்வதற்குப் பகுத்தறிவு அத்தியாவசியகமாக ஒவ்வொருவனுக்கும் வேண்டியதேயன்றோ? பகுத்தறிவு முற்றுமேயில்லை, சார்பினாற்றான் பகுத்தறிவுண்டாகின்றதென்று வாதிப்போர் ஆதியில் மனிதனுக்குப்பகுத்தறிவு எப்படிஉண்டாயிற்றோ அதைவிளக்கிக் காட்டுவாராக. ஆதியில் மனிதன் உற்பவமானபோது தான் சேர்ந்தொழுகுவதற்கு ஒருவருங் கிடையாதகாலத்தில் அவனுக்குப் பகுத்தறிவு எங்ஙனம் உண்டாயிற்று? அன்றியும் எல்லா ஜீவராசிகளிலும் மனிதன் தான் உலகத்திற்செய்யுஞ்சகலகருமங்களுக்கும் கர்த்தருடைய சந்நிதானத்தில்உத்தரவாதஞ்செய்யவேண்டியவனாயிருக்கிறானென்றும், அவன் இவ்வுலகத்திற்புரியுநற்காரியங்களுக்காக ஆண்டவனிடத்திலிருந்தொருவிதபரிசுபெறுகிறானென்

றும், தீக்காரியங்களுக்காக ஒருவித தண்டனை அடைகிறானென்றும் ஒவ்வொரு மதவாதியும் ஒப்புக்கொள்ளுவான். ஆகவே இயற்கையில் விதிவிலக்குகளைப்பகுத்தறியும் சக்தியை இறைவன் அவனுக்கு அளித்திராவிட்டால் அவன் புரியும் காரியங்களைக் குறித்து இன்னது சரி, இன்னது சரியன்று என்றுதீர்மானஞ்செய்வது அவருக்குநியாயமல்லவே. அதுதருமமுமாகாதே. தெய்வநம்பிக்கையில்லாதவர்களும் பகுத்தறிவு மனிதனுக்கு இயற்கையிற் கிடையாதென்று வாதிக்கிறவர்களுமாகிய நாஸ்திகசோதரர்களும் பொய்-களவு முதலிய தீயகாரியங்களைச் செய்பவர்களைத் தண்டிப்பார்களே. அவர்கள் என்செய்வார்கள்? தாங்கள் சார்ந்த இனத்தால் அவர்கள் அந்தப்படி தீயகாரியங்களை இழைத்தார்களென்று அவர்களை மேற்படி நாஸ்திகசோதரர்கள் சும்மா விட்டுவிடுவார்களோ? மனிதன் செய்யும் சகல காரியங்களும் அவன்சேர்ந்த இனத்துக்கேற்றபடியேயிருக்கின்றனவென்று சாதிப்போமாகில், நல்லவனென்றொருவனைப் பூஷிப்பதும் தீயவனென்றொருவனைத் தூஷிப்பதுங் கிடையாவன்றோ. அது நிற்க.

மேலே பகுத்தறிவென்று கூறிவந்த மனோதத்துவசுபாவஉணர்ச்சி நாகரீகமதிகரிக்க அதிகரிக்க மிகுதியாய் இயங்கிக்கொண்டுவருகிறது; ஆகவே அபிப்பிராயங்களும் பேதித்துக்கொண்டு வருகின்றன. மவுட்டிய ஜாதியாருக்குள் விவாதத்துக்கிடமான பெருந்தவிஷயத்தைக்குறித்தும் வெகுவாய்ஏகோபிதமான அபிப்பிராயந்தானிருக்கும். நாகரிகம்பெற்று புத்திவிசாலங்கொண்ட ஜாதியாருக்குள் சாதாரணவிஷயத்தைப் பற்றியும் அபிப்பிராயபேதங்களிருக்கும். ஆகையினால் நாகரிகமானவர்கள் ஒருவிஷயத்தைப்பற்றி முடிவானதீர்மானத்துக்கு வரவேண்டியதாயிருந்தால் அவர்களிற்பெரும்பான்மையோருடைய அபிப்பிராயத்தையே சரியென ஒப்புக்கொள்வார்கள். சங்கங்களும் சபைகளும் நாகரிகர்களுக்குள்ளன்றி மிலேச்சர்களுக்குள் கிடையா. ஆகையால் நாகரிகம்பெற்றதேசத்தில் உயிர்வாழ்ந்துவரும் எவனும் தனக்குமாறாகத் தன்னுடைய சகோதரர்கள் கொள்ளும் அபிப்பிராயத்துக்காக அவர்களைவெறுக்காமலும் அவர்கள்மீது சினங்கொள்ளாமலுமிருக்கவேண்டியது. அவனவனுடைய பகுத்தறிவுக்கேற்றபடி அபிப்பிராயமும் இருக்குமாதலின், யாவ

ரும் ஏககாலத்தில் ஒருவிஷயத்தைப்பற்றி ஒரேவிதமான அபிப்பிராயத்தைக் கொள்ளுவார்களென்று நாம் எண்ணுவது அறியாமை. அநேகர் தம்முடைய சகோதரர்கள் சிலவிஷயங்களைக்குறித்து மாறான அபிப்பிராயமுடையவர்களா யிருப்பதைக்கண்டு அவர்களை வெறுத்துத் தீராப்பகை பாராட்டிவருகிறார்கள். அதுபெரும்பிழை. அவர்கள் மானிட மனோதத்துவ லட்சணத்தை உணராதவர்கள்.

ஜெர்மெனி தேசத்துச் சக்கரவர்த்தியாகிய 5-வது சார்லஸ்என்பவர் ஜனங்கள் தம்முடைய அபிப்பிராயப்படி சிலராஜரீகவிஷயங்களில் ஒத்து வாராததைக்கண்டு அதிக அருவருப்படைந்து அரச வாழ்க்கையைத் துறந்து ஸெண்டு ஜஸ்ட்டு என்னும் பெயர்போன மடாலயத்தைச்சேர்ந்தார். அங்கு உலகவாழ்க்கையை ஒழித்துமனக் கவலையற்று நிம்மதியாயிருந்து நாள் கழிக்கலாமென்று போன அப்பெருந்தகையார் பொழுதுபோக்காகச் சிற்சில கைத்தொழில்வேலைகளிற் பயின்றுவந்தார். அவர் கடிகாரவேலையிலே பழகிவருகையில், "அசேதனப் பொருள்களாய் என்னால் சிருஷ்டிசெய்யப்பட்டு நான் இயக்க இயங்கும் இந்த இரண்டு கடிகாரங்கள் நான் என்னபாடுபட்டாலும் என்னுடைய அபிப்பிராயபிரகாரம் ஒருபடித்தாய்க் காலங் காட்டமாட்டோமென்கின்றனவே; சேதனப்பொருள்களாகப் பிறந்து பகுத்தறிவு பெற்றவர்களாயிருந்து தாமே இயங்கும் தன்மையுடையவர்களாயுள்ள அநேக ஜனங்களை ஏககாலத்தில் என் ஒருவனுடைய அபிப்பிராயப்படி அபிப்பிராயங் கொள்ளவேண்டியதென்று விரும்பி அதற்காகப் பெருங்கட்சிகட்டிக்கொண்டு அளவிறந்த செல்வத்தை யழித்ததுமன்றி எண்ணிறந்த உயிர்களையுங் கொன்று உதிரவெள்ளத்தில் நீந்தினேனே. என் அறியாமை இருந்தவாறு என்னே! என்னே!" என்று ஒருநாள் துக்கித்துப் பிரலாபித்தார்.

ஆகையால் ஒருவிஷயத்தைக்குறித்துப் பலரும் நம்மைப்போலவே அபிப்பிராயங் கொள்ளவேண்டியதென்று நாம் கருதுவது பெரும் பிழை. அபிப்பிராயபேதத்துக்காக ஒருவனை நாம் வெறுத்தல் மானுடதருமமன்று. ஒரு விஷயத்தைப்பற்றி நாம் நம்முடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்போது இன்னதைச் சொன்னால் இன்னாருக்கு மனவருத்தமாயிருக்கும்; இன்னதைக் கூறினால் நம்

முடைய இன்ன சுவப்பிரயோசனங் கெட்டுவிடும்; என்னும் இவை போன்ற அற்பகுணங்களை அறவே ஒழித்து நடுவுநிலைமையுடன் நம்முடைய கருத்தை வெளியிடுவதே மனோதைரியமாகும்.

"நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்"

நடுவு நிலைமையில்லாமையினால் வருஞ் செல்வம் நன்மையைத் தருவதாயிருப்பினும் அதை அப்பொழுதே ஒருவன் விடக்கடவனென்று பொருள்படவும்,

"கெடுவல்யா னென்ப தறிக தன்னெஞ்சு
நடுவொரீஇ யல்ல செயின்."

ஒருவனுடையமனம் நடுவுநிலைமையினின்றும் நீங்கி எப்போது பக்ஷபாதங்களைச் செய்யத் தலைப்படுகின்றதோ அப்போது அது பின்பு அவனுக்குவருந் தீமைகளை முன்னறிவிக்கும் உற்பாதமெனஅவன் அறியக்கடவனென்று பொருள்படவும் ஆன்றோர் கூறியுளார் (ஜநவிநோதினி.)

உ

கடவுள்துணை.

தன் சரிதமுணர்த்துமொழி.*

செம்பவள மெய்யன் சிவன்சுத னைங்கரனை
நம்பவள மாமே நமக்கு.

ஆயப்புகுவோர் எவர்க்கும் தன் பிறப்பு வளர்ப்பு உணர்த்துமொழியென்பது இதன் பொருள். இத்தகைய மொழிகளை எடுத்துப் புத்தகக்கணக்காய் எழுதியுள்ளார் நமதுமேனாட்டார். இன்னதன்ன முயற்சியே, அன்னோர் பாஷைவளர்ச்சிக்குக் காரணம் என்பார்கள். ஆகவே, இம்முயற்சி நம்மிடத்தும் உண்டாயின் நமது பாஷைவளர்ச்சிக்கும் இடம் உண்டு என்று இத்துறையில் இறங்கிய காரியம். இஃது எம்போலிகட்கு இயலாததொன்று. ஆயினும் இதை எனக்கு வற்புறுத்தியவர், இதன்பொருட்டுச் செய்யும் எச்சிறுமுய

* இவ்வியாசம், மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஏழாம் வருஷோற்சவக் கூட்டத்தில், ஆசிரியரால் படிக்கப்பெற்றது.

ற்சியும் தகும் என்றார். இவர் தான் யாரெனின், எமது வித்தியா விசாரணைத்தலைவரில் ஒருவராய் இம்மதுரைமாநகரில் வீற்றிருக்கும் கனம். வில்லியம்ஸ் பிள்ளையவர்கள். இத்தகையவர் சொற்றுணையாக இவ்வழிவந்தேன். இவர்கள் கொடுத்த சில குறிப்புகளைக்கொண்டு "நெய்" என்பதைப்பற்றி முன்னோர் வியாசம் எழுதியுள்ளது எமது தஞ்சைத்தமிழகத்தில் பிரசுரமாகியிருத்தல் எம்மிற் சிலர் கண்டிருக்கலாம். இப்போது "அணி" என்பதைப்பற்றி எழுதப்பட்டுள்ளது.

"அணி" யென்பது செயப்படுபொருண்மையில் வரும் "இ" வ்விகுதி புணர்ந்து குன்றி அணியப்படும் பொருளுக்கு ஆயதோர் ஆகுபெயர். இவ்வணிதான் மேலணி, கீழணி, இடையணி என மூவகைத்து.

I. மேலணி.	தலையிலணியும் அணி. காதணி, மூக்கணியும் இதனுள்ளடங்கும். உயர்ந்த உலோகத்தாற் செய்த அணியுமாம். (உயர்ந்தஉலோகம்-பொன்.)
II. கீழணி.	காலில் அணியும் அணி. கால்விரலணியும் சேரும். மட்ட உலோகத்தாற் செய்த அணியுமாம். (மட்டஉலோகம்-வெள்ளி.)
III. இடையணி	இடையில் அணியும் அணி. தலை, கால் ஒழிந்த ஏனையபாகத்து அணியும் அணியுமாம். (இருவித உலோகத்தால் செய்யும் அணியுமாம்.)

ஈண்டுத் தொகுத்துச் சொல்லிய ஒவ்வொன்றையும் இனி வகுத்துச் சொல்லுவோம் :—

I. மேலணி.

1. குடிரிப்பூ.—இது குடுமியில் அணியும் ஓர் பொற்பூ. (குடுமி-ஆண்மயிர்.)

2. குஞ்சிப்பூ—குஞ்சியிலணியும் ஓர் பொற்பூ. (குஞ்சி-பொதுமயிர்.) 'அப்பூதி குஞ்சிப்பூவாய்நின்ற'— ஆண்மயிர். 'குஞ்சியழகும்'—பெண்மயிர்.

3. தாழம்பூ—தாழம்பூவின் துண்டம்போற் செய்துள்ள ஓர் பொன்னணி.

4. கொட்டை.—புன்னைக்கொட்டை முதலிய கொட்டைபோற்செய்துள்ள பொன்னணி.

5. செவ்வந்திப்பூ.—செவ்வந்திப்பூப்போற் பொன்னிற் செய்த பல பில்லைகள். இணைத்துத் தொடுத்துச் சடைமேலணியும் அணி. அஃது இப்பால் சடைநாகமாக மாறியுள்ளது.

6. குஞ்சம்.—இது குஞ்சியின் நுனியில் தொங்கவிடும் பூங்கொத்துப்போன்ற அணி. இதைப் புஞ்சம் என்பார்கள். (குஞ்சம்-பூங்கொத்து. புஞ்சம்-நூற்கொத்து.)

7. கொப்பு.—இஃது ஓர் காதணி. பூங்கொப்புப்போன்ற பொன்னணி. (கொப்பு-கொம்பு.)

8. கன்னப்பூ.—ஓர் காதணி. (கன்னம்-காது.)

“வேனலம்பதிகொலைவிடமூட்டியவெவ்வேல்
மானவஞ்சனமெழுதியவிழிபொரவராலாற்
றூனதன்பகைதனைத்துணைகொண்டுறும்தகைபோல்
பானலஞ்செவிமிசையணிந்தனளொருபாவை.”

9. புன்னைப்பூ.—இதுவும் ஓர் காதணி. ஒன்னைப்பூவென மருவிவழங்கும் ஓர் பொன்னணி.

10. ஓலை.—ஓர் காதணி. பனையோலைச் சுருள்போன்ற பொன்னணி. இது பனையோலை தென்னோலையகலத்திற்குப் பொன்னாற்செய்து கடிகாயந்திரச்சுருட்டகடுபோற் சுருட்டிக் காதிற்செருகியிருந்திருக்கவேண்டும். இப்பால் ஓலைச்சுருள் பாவனையாகச் செய்யப்பட்டுள்ளது.

“அடுத்துமாதவமழிமினென்றனங்கவேள்தமக்கு
விடுத்தவோலையைக்கண்கடம்மேற்பழிவிளம்பில்
கொடுத்தவேண்டிசைநிறைகூறுதற்குவைத்திருத்தல்
கடுத்துவாழ்தரவொருத்திபொன்னோலைகாதணிந்தாள்.”

என்னும் செய்யுளால் பிரபுலிங்கலீலையார் காலம்வரை அம்மாதிரிச் சுருளை வழங்கிவந்ததென்னலாம்.

11. சிமிழ்க்கி.—இது சிமிழ்க்கிப்பூப் போன்ற பொன்னணி. கொப்பிலும் ஓலையிலும் கட்டுண்டு தொங்கப்பெறும். (சிமிழ்த்தல்-கட்டுதல்.)

12. குழை.—தளிர்க்கொத்துப்போன்ற பொற்காதணி.

13. கொந்திளவோலை.—தளிர்க் கொத்தோடு கூடிய இள வோலை. (கொந்து-கொத்து. இளவோலை-குருத்தோலை.)

14.—மூக்குத்தி.—மூக்குக்குத்தியென்றிருந்தது மூக்குத்தியெனமருவிவந்தது. இஃது இப்பெயர்கொண்ட கொடிக்காய் போன்ற பொன்னணி.

II. கீழணி.

1. கிண்கிணி—இப்பெயருள்ள காட்டுக்காய்போற் செய்துள்ள வெள்ளிமணி கோப்புண்ட ஓர் காதணி. பாதசங்கை, பாதசரம், பாதசாலம் என்பன இதன் விகற்பம். "குறுகுதலைக்கிண்கிணிக்காற் கோமக்கள்." மேற்கூறிய காயைத் தட்டைக்கிலுகிலுப்பை என்பார்கள். "கில் கில்" என்னும் ஒலியுண்டாமபடி தண்டையிற் கோப்புண்ணுங்காய் என்பது கருத்துப்போலும்.

2. தண்டை—ஓர் காலணி. கொறுக்கைமுதலிய தட்டைகளை வளைத்துக் கட்டினல் ஒத்த ஓர் வெள்ளியணி. தண்டை-தட்டை. தட்டையின் குழையில் மணிகளையிட்டுச் சப்திக்கச்செய்யவேண்டும். இது பண்டைச்சிலம்புபோலும். "பொற்பார் சிலம்பின் ஒலியளித்தார்" "சிலம்பு புலம்ப" என்பன காலணிகள் ஒலியிடும்படிக்கே செய்துள்ளனவென்று விளக்கும்.

> "கறையடிக்களியானையின்வாவினைக்கண்டு
> மறுகினுற்றவரிரிதரமணிமருங்கிடல்போல்
> உறுதவத்தினாறிந்தனரோடவொண்ணுதற்கு
> நறுமலர்ப்பதத்தணிந்தனள்சிலம்பொருங்கை."

இதைக்கொண்டு மாதர்வரவைக் குறிப்பாலறிந்து ஆடவர் ஒதுங்குமாறு இயற்றிய அணியெனவும் பெற்றும். இந்நோக்கம் அறியாது, இக்காலத்து மாதர்கள் கெட்டிக்காப்பு, கெட்டிக்கொலுசு தரிக்கிறார்கள். ஆயினும் குறைவில்லை. "மட்டி" யெனவழங்கும் "வட்டி" யெனும் கால்விரலணி இத்தொழிலை நடத்துவதே போதுமானது. (வட்டி - வட்டவடிவுள்ளது.)

III. இடையணி.

1. கொடி.—சிந்திக்கொடிபோன்ற அணி. இது கழுத்துக்குச் செம்பொன்னாலும் இடைக்கு இருவகைப் பொன்னாலும் செய்து கொள்வார்கள். அங்கலிங்கமுடையாரிற் பெரும்பாலார் கழுத்துக்கும் வெள்ளிக்கொடியணிவார்கள்.

2. அரசிலை.—இஃது அரசிலைபோன்ற அணி. இதை மேற்கண்ட கொடியிற்சேர்த்துச் சிறுபெண் குழந்தைகளின் இடையில் அணிவார்கள். "அரைமூடி" யென்னும்பெயருள்ளது. இப்பெயரே இதை அணியும் இடமும் நோக்கமும் வெளியிடும். இதைப்பொன் வெள்ளியில் தனித்தும் கண்ணாடியை யிணைத்தும் செய்துகொள்ளுவார்கள்.

3. தம்பித்தோழன்.—இது கிண்கிணிக்காய்போன்ற அணி. இதை இருவகைப் பொன்னிலும் செய்து மேற்காட்டிய கொடியிற் கோத்து சிறு ஆண்குழந்தையின் இடையிற்றரிப்பார்கள். குழந்தைகள் தொங்கும் தங்குறியை ஓயாது தொடுங் கெட்ட பழக்கத்தை மாற்றுவதே இவ்வணியின் நோக்கம். "தம்பித்தோழ" ப்பெயரமைதியும் உற்றுநோக்கற்பாலது.

4. காறை.—வைக்கோற் காறையொன்றை வளைத்துக் கட்டினலொத்த பொன்னணி. இது கழுத்திலணியப்பெறுவது. (இக்காலத்துச்சரட்டட்டியலைக் கவனிக்க. காறை ஒற்றைவைக்கோல்தான்.)

5. பட்டைக்காறை.—இஃது ஓர் கழுத்தணி. வைக்கோற்காறைக்குள்ள துவளுந்தன்மை யிலாமைகண்டு மூங்கிற்பட்டை முதலிய விறைத்துநிற்பதான ஒன்றையொத்துச்செய்த கட்டணி.

> "கற்றையங்குழலனுமலர்த்தொடையொங்கனமாய்
> உற்றணங்குமென் றிலகுபூண்பிடிப்பதையொப்ப
> விற்றயங்குவாணுதலெழின்மாயைதன்மிடற்றில்
> பொற்றடந்தகட்டணியொருமடவரல்புனைந்தாள்."

. கைவளை.—காற்றண்டைபோல் வளைத்துக் கட்டியதொன்றாம்.

(தொடரும்.)

J. சாமிநாதன்.

தாவர நூல்.*

சமீபகாலமாக நமது தேசத்தாரிடத்தில் ஜாதீய உணர்ச்சியின் பயன் பலதுறைகளிலுங் காணப்படுவதுகொண்டு, சுதேசபாஷாபிவிருத்தி விஷயமும் நமது தேசத்தார் மனதிலே ஆழப்பதிந்து வருவதை யறியலாம். சர்வகலாசாலையிலும் இவ்விஷயத்தைப்பற்றிப் பெருந்தர்க்கமும், யோசனையும் புரியத் தலைப்பட்டிருப்பதுடன், சுதேசக்கல்விச்சங்கத்தாரும் சுதேசபாஷைக்குள்ள உரிமைவிஷயங்களையும் எடுத்துக்காட்டி வருகின்றார்கள். பண்டிதர்கள் பழைய செல்லரித்த ஏடுகளைப் பொறுமையுடன் ஆராய்ச்சி செய்வதைக் காண்பதல்லாமலும், தமிழ்மக்களின் பண்டைச் சரித்திரவியல்புகளையும் பொதுவாய்ப் புராதன சரித்திரங்களின் நிர்ணயத்தையும் ஊகித்தறியவேண்டுமென்ற அவா புதிதாகத்தோன்றியிருக்கிறது.

சுதேசபாஷைகள் அறிவைப் பரவச்செய்வதற்குத் தக்ககருவியாவதோடு மேற்கூறிய கிளர்ச்சிகளனைத்தும் அதற்கு அனுகுணமானவை யென்பதும் நிதர்சனமேயன்றோ? நமது சுதேசபாஷாபிவிருத்தியோடு மட்டிலும் நின்றுவிடவில்லை, இந்த ஜாதீயவுணர்ச்சி. மேல்நாட்டுச் சாஸ்திரப் பயிற்சிபெற்று அதன் அற்புதத்தைக் கண்டறிந்த நமதுதேசத்து விஞ்ஞானிகளிற் சிலர் நமது காலதேச வர்த்தமானத்துக்கு இயைந்த வழிகளிலே அந்த அறிவைப்பரவச்செய்து நம்மவர்களுடைய அந்தகாரத்தை நீக்கவேண்டுமென்று லோகோபகாரமாகப் பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள். அதிலே, ஜில்லாக்கள் தோறும், பிரதமபாடசாலை உபாத்தியாயருக்கு மேற்கூறிய சாஸ்திரஞானத்தைத் தெளிவாக எளிதிலே கிரகித்துக்கொள்ளும்படி உபந்நியாசங்கள் ஏற்பாடாயிருப்பதுடன், சுதேசபாஷையிலே பிரசுரமாகும் பத்திரிகைகளிலும் சிற்சில உபந்நியாஸங்களும் வெளிவந்திருப்பதைக் காண்கிறோம். ஆனால் மேல்நாட்டுச் சாஸ்திரத்தில் பற்பல அம்சங்களின் மூலாதாரமான உண்மைகளைக் குறிக்கும் எளிய தெளிவான புத்தகங்கள் சுதேச பாஷையில் வெளிப்படுத்த

* இந்நூல், 181 - படங்களுடன், சென்னை கவர்ண்மெண்டு மியூசியம்: ஸ்ரீமாந் - K. அரங்காசாரியரவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. விலை ரூ. 1—8—0.

வேண்டுமென்ற ஊக்கமான பெருமுயற்சிகளைக் காணோம். மேற்கூறிய விஷயங்களை ஆராயுமிடத்து, "தாவரநூல்" (Elementary Botany) என்று இப்போது வெளிவந்திருக்கும் புத்தகம் வரப்பெற்றிருப்பது பெருமகிழ்ச்சிதருகின்றது. இது, சென்னைமியூஸியம், ஸ்ரீ: க. அரங்காசாரியர் M. A. L. T., என்பவரால் இயற்றப்பெற்றது. இவ்வாசிரியர் நமது தென்னாட்டுத் தாவரங்களைப்பற்றி விசேஷஞானமுள்ளவரென்ற உண்மையைத் தமிழகம் அறிந்திருக்கலாம். "நிறைகுடம் நீர்தளும்பலில்" என்பதற்கேற்ப நமது ஆசிரியர் ஒருகால் இதுவரை தம்மைப் பிரசித்தப்படுத்திக்கொள்ளாது அமர்ந்திருந்தாரெனினும், இப்போது உலகத்தாருக்கு இயற்றவேண்டிய கடமையை மேற்கொண்டு, தமது பரந்த அநுபோகமும், அறிவும் பயன்படுமாறு இவ்வரிய புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார். அவர் தமது புத்தகத்தின் முகவுரையிற்குறித்தபடி தாவரசாஸ்திரசம்பந்தமான புத்தகங்கள் ஆங்கிலத்திலேயே எழுதப்பட்டிருப்பதுடன் அவை வெகுவாய் ஆங்கிலநாட்டுத் தாவரங்களையும் மற்றும் பரதேச விருக்ஷங்களையும் பற்றியனவாகவே இருக்கின்றன. எனவே, நமது தமிழ்நாட்டாருக்குப்பயன்படக்கூடிய வழியிலே மிகுந்த சாமர்த்தியத்துடன் நமது ஆசிரியர் இப்புத்தகத்தை அமைத்திருப்பது சாலவியக்கத்தக்கதே. மேலும், புஸ்தகமுழுவதிலுமே ஆசிரியர் எழுதியிருக்கும் முறையை நோக்குமிடத்து, அவர்தம் யோசனைசக்தி நன்குவிளங்குகிறது. மேலும், இத்தகைய நூல்கள் இயற்றுவதில் ஒரு பெருங்குறை யேற்படக்கூடியது. அஃதாவது; ஆங்கிலத்திலுள்ள சில அருமையான பதங்களுக்கு நேரான தமிழ்மொழியின்றித் திகைப்பதேயாம். ஆனால்; இவ்விஷயத்தில் நமது ஆசிரியர் தமது புத்தகத்தின் இறுதியில் தொகுத்திருக்கும் அரும்பத அகராதியினால் அவ்விதக்கஷ்டமும் நீங்கிவிட்டது.

இந்நூலின், 1-ம் அத்தியாயம், "உயிருள்ளவற்றின்—குணமும், வேறுபாடும்" என்ற விஷயத்தை விரிவாய்த் தெரிவிப்பது. இதை வாசித்தமாத்திரத்தில் "உயிருள்ளன" என்பதைப்பற்றி நாம்பொதுவாய் வைத்திருக்கும் குறுகிய அறிவு நீங்கிவிடும் என்பது நிச்சயம்.

2-ம் அத்தியாயத்திலே, "செடியின் அமைப்பும் உறுப்புகளும்" என்றவிஷயம் விவரித்து எழுதப்பட்டுள்ளது. ஊக்கத்துடன் பரி

சோதனை செய்தாலன்றி அவற்றின் உண்மைகள் எளிதில் வெளிப்படா. இவற்றையெல்லாம் உதாரணங்களால் ஆசிரியர் விளக்கியிருப்பது மிகவும் பாராட்டத்தக்கதேயாம். மற்றைய அத்தியாயங்களிலே செடியின் பற்பல பாகங்களைப்பற்றிய திட்டமான விவரம் குறிக்கப்பட்டிருக்கிறது.

"வேரும்—அதன் வேலையும்" என்ற அத்தியாயம் பல உதாரணங்களால் நனது விளக்கப்பட்டுள்ளது. "குருத்தும் இலையும்" என்ற அத்தியாயம் மிகவும் கவனிக்கத்தக்கதே. அதில், நாம் சாதாரணமாய் வேரென்று நினைத்து மயங்கக்கூடிய சிலவற்றைப்பற்றி எழுதியிருக்கிறது. "செடியின் ஆதாரங்களும், கோசங்களும்" என்ற விஷயமானது மனதைக்கவரத்தக்கதாயிருக்கிறது. செடியின் "மகுடம்" என்றுசொல்லக்கூடிய பாகமாகிய பூவைப்பற்றிய விஷயம் நன்கு ஆராய்ந்து எழுதப்பட்டிருக்கிறது. அப்பால் பூவின் தொழிலமைப்பு விசாரிக்கப்படுகிறது. இதைப்படித்த அளவில் ஈசுவரசிருஷ்டியின் அற்புதமான அமைப்பும் ரகசியங்களும் ஒருவாறு விளக்கமாகத்தெரியவரும்.

அடுத்த அத்தியாயத்தில் "செடியின்—வாழ்க்கையும் வேலையும்" கனி, வித்துகள் உண்டாகும் விதமும் விஸ்தாரமாக எடுத்தாளப்பட்டுள்ளன. செடிகளின் வெளித்தோற்றம், குணங்கள் முதலியவற்றால் பற்பல ஜாதிகளாகப் பிரிப்பதற்கு ஏதுவாகிறது. "செடிகளைப்பிரிக்கும்முறை" என்னும் அத்தியாயத்தின்கீழ் மேலேகுறித்த விஷயம் ஆராயப்பட்டிருக்கிறது. அப்பால் புத்தகமுழுவதினுமே அதிமுக்கியமான பாகமாகிய "செடிகளின் நுட்பமான அமைப்பு" என்ற விஷயம் தக்க உதாரணமுகத்தானும் பரந்த அறிவானும் எழுதப்பட்டுள்ளதிறமை படிப்போர்மனதில் மகிழ்ச்சி விளைவிக்கும் என்பது திண்ணம். "செடிகளின் உள்ளமைப்பு" என்பதைப்பற்றித் தெளிவாக வரையப்பட்டிருக்கிறது. செடிகள் உண்பதும், குடிப்பதும், சுவாசிப்பதும், உறங்குவதுமென்ற விஷயங்கள் ஆச்சரியத்தை யெழுப்பும்வண்ணம் எழுதப்பட்டுள்ளன. எல்லாவற்றினும், மிக்க ஆச்சரியத்தைக் கொடுக்கத்தக்கதொரு விஷயம் நமது அறிவின் சிறுமையையும், ஈசுவரசிருஷ்டியின் அத்யாச்சரியத்தை

யும் விளக்கி நிற்பது. அதாவது:—புழுப்பூச்சிகளைக்கொன்று உட்கொள்ளும் செடிகளுமுண்டென்ற உண்மையே. மேலே கூறிப்போந்தவற்றால் இப்புத்தகத்தின் அருமை பெருமைகள் தெள்ளிதின் உணரப்படும். இதை வாசித்த அளவில் இயற்கையினது அதிசயங்களும், வாழ்க்கையைப்பற்றிய பற்பல புதிய எண்ணங்களும் தோன்றுமென்பதற்கையமில்லை. இவ்வளவு அழகாகவும் தெளிவாகவும் அரிய விஷயங்களைக் கையாண்ட ஆசிரியர்மாட்டித்தமிழுலகம் பெரிதும் கடப்பாடுடையதென்பது திண்ணம். இத்தகைய சிறப்புவாய்ந்த புத்தகத்தைத் தமிழறிந்த மக்கள் வாங்கிப்படித்தலால் அவர்கள் பெரும் பயனடைவதற்கேதுவாம் என்பது சொல்லாமலே விளங்கும்.

G. N. R.

உ

கணபதி துணை

தமிழ்ச்சொல் விளக்கவாசங்கை.

செந்தமிழ்த்தொகுதி 6. பகுதி 1-ல் கனம்பொருந்திய மாகறல்-கார்த்திகேயமுதலியார் எழுதிய தமிழ்ச்சொல் விளக்கத்தை வாசித்தறிந்தனன். இவ்வாராய்ச்சி மிக அருமையானதே. இதுவரையும் 'தமிழ்' என்னும் சொல்வந்த காரணமும் அதன்பொருளும் ஒருவரும் உணர்ந்தாரிலர். இப்பொழுது முதலியார் உரைத்தகாரணமும் அதன் பொருளும் நுணுகி ஆராய ஆராய மகிழ்வே தருகின்றது.

ஆயினும் அதனுள்ளே சில ஆசங்கைகள் உண்டாகின்றமையின் அவற்றை முதலியார் அன்புகூர்ந்து விளக்குதல்செய்யின் எல்லோர்க்கும் பேருதவியாகும்.

அவ்வாசங்கைகளாவன:—

1. 'தமிள்' என்பது 'தமிளம்' என்றாகும். 'தமிளம்' என்பது 'த்ரமிளம்' என்றெவ்வாறாகும்? விளக்கல் வேண்டும்.

2. பஞ்சத்திராவிடங்களுள் தமிழும் ஒன்றே அன்றோ? தமிழி னின்று பிரிந்த பஞ்சத்திராவிடமெனின், தமிழ் வேறு பஞ்சத் திரா விடம் வேறு என்றாகின்றதே. அஃதெப்படி?

3. ஆயம்-ஆயல், சொல்-சொள், பெருமால்-பெருமாள் என்ப வற்றின் பொருளை ஐயமற நன்றாய் விளக்கல் வேண்டும்.

4. இக்காலத்தும் புலவர்க்கும் புலப்படாத வழக்குகள் உள வென்பது எப்படி? அறிய விரும்புகின்றேன்.

5. பலகம் என்பதின் காரணம் என்ன? வடமொழியாளர் ஓர் காரணம் கூறுகின்றனர்.

6. தமம், தமர முதலியனவும் தமிழ்ச்சொல்லா? ஆரியச்சொல்லா?

7. வித்தியாதிபதி சூரியனாகவும் சூரியனையுணர்த்தும் தாமம் என்பது தமிழெனத் திரிந்ததெனவும் சொல்லின், தமிழ் ஆரியமுத லியவற்றிற்கெல்லாம் பொதுவாதல் வேண்டுமே? அவ்வாறாகுமோ? சூரியன் வித்தியாதிபதியென்பது தமிழ்க்குமாத்திரம் அல்லவே?

8. ஓரறிவுயிர்களும் சூரியனால் உணர்ச்சிபெறுகின்றனவா?

9. ஊழி-யுகம், எப்படி? காரணம் வேண்டும்.

10. சூரிய சமயத்துக்கும், சைவ சமயத்துக்கும் சம்பந்தம் எப்படி? விளக்கல்வேண்டும்.

திருவள்ளூர்,
27—6—1908. } அ. சிதம்பர முதலியார்.

உ

நல்லொழுக்கம்,

[ஸ்ரீ: இலக்ஷ்மணப் போற்றிகள் மொழிபெயர்ப்பு.]

(முற்றொடர்ச்சி.)

சேர்க்கைபொருந்திய ஜனசமூகத்தின் கெட்ட பழக்கங்களைத் தடுப்பதற்கு அதிகமான சன்மார்க்க தைரியத்தைப் பிரயோகிக்கவேண்டியிருப்பது அவசியம். 'மிஸ்டரஸ் கிரண்டி' (Mrs. Grundy) என்பவள் மிகவும் இழிவும், சாதாரணமுமான ஆளாயிருந்தபோதிலும், அவளுடைய வசீகர சக்தியானது ஆச்சரியகரமாயிருக்கிறது. அனேக மனிதர்கள், ஆனால் முக்கியமாக ஸ்திரீகள், தங்கட்கு உரித்தான வகுப்பு அல்லது ஜாதிக்கு சன்மார்க்கசம்பந்தமான அடிமைகளாயிருக்கின்றனர். அவர்களுக்குள் ஒருவர் மற்றவர்மீது தன்னறியாத ஒருவித துராலோசனையை நிகழ்விக்கின்றனர். ஒவ்வொரு வட்டத்தாரும், பிரிவினரும், ஒவ்வோர் அந்தஸ்திலும் வகுப்பிலும் உள்ளவரும் அவரவர்க்குரிய வழக்கங்களையும், கிரியைகளையும் உடையராயிருக்கின்றனர். அக்கிரியைகளில் ஒற்றுமையில்லாவிடில் ஜாதி சம்பந்தம் நீக்கப்படுவர். சிலர் அகங்கார அழகு என்னும் வரம்பில் அழுந்தியிருக்கின்றனர். சிலர் முன் வழக்கத்திலும், சிலர் இஷ்ட அபிப்பிராயத்திலும் கட்டுப்பட்டிருக்கின்றனர். தங்கள் ஜாதிக்குத் தகாத வண்ணம் நினைக்கவும், தங்கள் இனத்தாரைக்கடந்து நடக்கவும், தங்கள் சுவாதீனமாக நினைத்து நடக்கவும், தைரியமுள்ளவர்கள் இருப்பது அருமை. நம் வகுப்பாருடைய அனுஷ்டிப்புக்கு ஒத்து நடப்பது கருதி, நம்வகைக்குத் தக்கவண்ணம் வாழாமல், கடனும், அழிவும், துன்பமும் நேரிட்டபோதிலும் நாம் உண்டு உடுத்து அலங்கார அழகைக் கொள்ளுகின்றோம். தங்கள் தலைகளைத் தட்டையாக்குகிற இந்தியர்களையும், கால் விரல்களை இழுத்துக்கட்டுகிற சீனர்களையும் நாம் நிந்தித்துப் பேசினபோதிலும், நமக்குள் நிகழும் அலங்கார அழகின் அவலட்சணத்தையும் மிஸ்டிரஸ் கிரண்டி (Mrs. Gruudy) உடைய அதிகாரம் சர்வவியாபகமாயிருக்கின்றதென்பதையும் கவனிக்கவேண்டியதாகத்தான் இருக்கிறது.

ஆனால் சன்மார்க்கத்திற் கோழைத்தனமானது ஒருவனுடைய சொந்தக் காரியத்திற்போல, பொதுக்காரியங்களிலும், முற்றும் காட்டப்படுகிறது. கெஞ்சுதலானது தனவான்களை முகஸ்துதி செய்வதில்மட்டுமன்று, எளியவர்களை முகஸ்துதி செய்வதிலும் பெரும்பாலும் செய்யப்படுகின்றது. முற்காலத்தில் முகஸ்துதி செய்வதானது, உயர்ந்த ஸ்தானத்திலுள்ளவர்களிடமட்டும் உண்மையைப் பேசத் துணியாமையில் விளங்கிற்று. ஆனால் இந்தக்காலங்களில் தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்களிடத்தும் உண்மையைப் பேசத்துணிவுறாமையில் புலப்படுகின்றது. சர்வஜனங்களும், இராஜ்ய அதிகாரத்திற்கு உரிமைப்படுகிற இக்காலத்தில், அவர்களை ஸ்தோத்தரித்து, அவர்களுக்கு முகஸ்துதி சொல்லி, அவர்களிடத்தில் மிருதுபாஷணமின்றி வேறுபேசாமலிருப்பதே நடப்பாக ஏற்பட்டுவருகின்றது. அவர்களிடத்திலில்லையென்று அவர்களே உணருகிற சற்குணங்கள், அவர்களிடம் ஆரோபிக்கப்படுகின்றன. நன்மையான உண்மைகள் கேட்க இனிமையற்றிருப்பதால் பகிரங்கமாய்ச் சொல்வதினின்றும், அவை நீக்கப்படுகின்றன. அவர்களுடைய தயவைப் பெறும் பொருட்டு, அநுஷ்டானத்திற்கு வருவது நம்பிக்கையில்லையென்றுணரக்கூடிய கொள்கைகள் விஷயத்திலும், பெரும்பாலும், அநுதாபம் காட்டப்படுகிறது.

மிகவும் குறைந்த கல்வியறிவும் ஸ்திதியுமுள்ளவனுடையதயவைப்போல உயர்ந்தகல்வியறிவும் ஸ்திதியுமுடையவனுடையதைத் தற்காலம் விரும்புகிறதில்லை. ஏனென்றால், அவனுடைய ஒப்பச்சீட்டானது பெரும்பாகத்திற்குரியதாயிருக்கின்றது. அந்தஸ்தும் செல்வமும் கல்வியுமுள்ள மனிதருங்கூட மூடர்களுக்கு முன்னர் ஸாஷ்டாங்கதண்டம் செய்வதைப்பார்க்கிறோம். அவர்களுடைய சம்மதச்சீட்டு அவ்வாறுதான் சம்பாதிக்கப்படத்தக்கதாகிறது. அவர்கள் வெகுஜனப்பிரிய ரசிதராவதினும், ஒழுக்கத்தைவிட்டு அநீதியாயிருக்கச் சந்நத்தமாயிருக்கின்றனர். சிலருக்கு ஆண்மையும், தீர்மானபுத்தியும், கௌரவமும் வகிப்பதினும் குனிந்துபணிந்து முகஸ்துதிசெய்வதும், துரபிமானங்களை எதிர்ப்பதினும் அவற்றினுக்கு இடங்கொடுப்பதும்; மிகவும் எளிதாகவுள்ளன. நீரோட்டத்தை எதிர்த்து நீந்துவதற்குப் பலமும் தைரியமும் வேண்டுவதா

*

கின்றது. ஆனால் இறந்தமீனெதுவும் நீரோட்டத்துடன் மிதக்கக் கூடும்.

வெகுஜனப்பிரியத்தைக் கொள்வதற்குப் பிறர் இச்சையைத் திருப்திசெய்யும் இழிகுணமானது சென்ற சிலகாலங்களில், விரைவாய் அதிகரித்திருக்கின்றது. அதன்போக்கினால், உத்தியோகநிர்வாஹகர்களுடைய ஒழுக்கமானது, தாழ்ந்து கேவலமடைந்திருக்கின்றது. மனச்சாக்ஷிகள் மிகவும் தளர்ந்திருக்கின்றன. அறைக்குள் ஓர் அபிப்பிராயமும் அம்பலத்தில் ஓர் அபிப்பிராயமுமாயிருக்கின்றன. துர் அபிமானக்கொள்கைகள் பஹிரங்கத்திற் புகழப்படுகின்றன; அந்தரங்கத்தில் இகழப்படுகின்றன. கடைசியில் மாறுதசிரத்தையுடையவர்கள், மாறியதுபோலப் பாசாங்குசெய்து மிகவும் விரைவில் முற்படுகின்றனர். பாவனையையும் கூடத் தற்காலம் நிந்தையுடன் நினைப்பது அருமையாகத்தோற்றுகிறது.

ஒரே விதமான சன்மார்க்கக்கோழைகள் மேலும்கீழும் பரவியிருக்கின்றனர். செய்கையும் பிரதிபலனும் சமமாயிருக்கின்றன. மேலானவர்களுடைய பாசாங்கும் சமயத்துக்குத்தக்கபடி நடத்தலும், கீழானவர்களுடைய பாசாங்குடனும் சமயம்போல் நடப்பதுடனும் கலந்திருக்கின்றன. மேலான நிலைமையிலுள்ளவர்கள், தங்கள் அபிப்பிராயங்களில் தைரியம் செலுத்தாவிடத்து, தாழ்ந்த நிலையினர்பால் என்ன எதிர்பார்க்கிறது? அவர்கள் தங்களுக்கு முன்னவர் நடந்தபடியேதான் தாங்களும் நடப்பார்கள். அவர்களும் தங்களுக்கு மேலானவர்களைப்போலவே, மறைக்கவும், தந்திரம்செய்யவும், நேரத்துக்கு ஒன்று சொல்லவும், சொல்வதொன்று செய்வது ஒன்றாகவும் செய்வார்கள். அவர்களுடைய நடக்கையை மறைத்தற்கு ஓர் முத்திரைப்பெட்டி அல்லது, ஓர் மூலைமுடங்குகொடுத்தால், அவர்கள் உள்ளபடியே தங்கள் சுவாதீனத்தை அனுபவிப்பர்.

வெகுஜனப்பிரியமாயிருக்கையானது இந்நாளில் எவ்விதத்திலும் ஓர்மனிதனுடைய அனுகூலத்திற்கு முற்குறியன்று: ஆனால் அவனுடைய பிரதிகூலத்திற்கு முன்னடையாளமாகின்றது. "விறைப்பான முதுகெலும்பைப் பொருந்தும்படியான துர்ப்பாக்கியத்தையுடையவன், கண்யதையடைகிறதில்லை" என்று உருஷியப்பழமொழி இருக்

கின்றது. ஆனால் வெகுஜனப்பிரியத்தை விரும்புகிறவனுடைய முது கெலும்பானது, இழைவாயிருக்கிறது. ஜனங்களுடைய புகழ்ச்சியை அடைவதற்கு எந்தப்போக்கிலும், தன்னைத்தாழ்த்தி வளைந்துகொடுப்பதில் வருத்தமடைகிறதில்லை.

ஜனங்களிடத்தில் உண்மையை ஒளித்து, அவர்களுடைய தாழ்ந்த இச்சைக்குத்தக எழுதியும் பேசியும், அதினும் கேவலம் ஜாதி வித்யாசத்தை எடுத்துக்காட்டியும், ஜனங்களை முகஸ்துதிசெய்து அடைகிற வெகுஜனப்பிரியமானது, சகலமானயோக்கியமுள்ள புருஷர்களின் பார்வையிற் கேவலம் இகழத்தக்கதாயிருத்தல்வேண்டும். மிகவும் பேர்போன ஓர் உத்தியோகஸ்தரின் ஒழுக்கத்தைப்பற்றி ஜெர்மிபெந்தாம் (Jeremy Bentham) என்பவர் சொல்லுகையில் "அரசாங்க ஆளுகைவிஷயமான அவருடைய கொள்கையானது, சிலரைப் பகைத்ததால் உதித்ததன்றி அநேகரை இஷ்டஞ்செய்ததால் உதித்ததில்லை யென்க. அது தன்னயம் பாராட்டுகையும், ஜனங்களிடத்திற்பாசமில்லாமையுமாகிய குணங்களினின்றும்; விசேஷமாய் உண்டாயிருக்கிறது" என்று சொன்னார். இந்த இலட்சணமுடையவர்கள் எத்தனைபேர்தான் தற்காலத்தில் இல்லை?.

சுவயமான நல்லொழுக்கமுள்ளவர்கள், உண்மையானது வெகுஜனப்பிரியமற்றிருப்பினும், அதைச்சொல்லும் தைரியம் உள்ளவராயிருக்கின்றனர். கர்னல், ஹட்ச்சின்ஸன் (Colonel Hutchinson) ஆனவர் வெகுஜனங்களின் புகழ்ச்சியைவிரும்பவாவது அதில்தற்புகழ்ச்சிசெய்துகொள்ளவாவது இல்லையென்று அவருடைய மனைவியாற் சொல்லப்பட்டது. அதாவது "புகழப்படுவதினும், ஒருகாரியத்தைச் சரியாகச்செய்வதில் அவர் மிகவும் பிரியப்பட்டார். இழிவான தயவைப்பெறுவதற்காகத் தம்முடைய சொந்தமனச்சாக்ஷி அல்லது நியாயபுத்திக்கு விரோதமாக நடக்கும்படி வைத்துக்கொள்ளவில்லை. உலகமுழுவதும் வெறுத்தாலும், தான் கட்டுப்பட்ட நல்லசெய்கையை நிறுத்தமாட்டார். ஏனென்றால், அவர் ஒவ்வொரு காரியத்தையும், அதன்யதார்த்த நிலைமையில்வைத்துப் பார்த்தாரேயன்றி இழிவானமதிப்பை எதிர்பார்த்துக்கவனிப்பது கிடையாது."

"வெகுஜனப்பிரியமாயிருக்கையை, அம்மொழிக்குள்ள தாழ்வும் சாதாரணமுமான கருத்துப்படி உடைத்தாயிருப்பது யோக்கிய

முன்று. உன்னுற்கூடியவரை உன்கடமையைச் செலுத்து, உன்சொந்தமனச்சாக்ஷியின் ஒப்புதலைப்பெற்றுக்கொள். வெகுஜனப்பிரியமாயிருக்கையானது, அதற்குள்ள சிறந்துஉயர்ந்த கருத்தினுல் உன்னையடைவது நிச்சயம்" என்று ஜான்பேக்கிங்டன் (Jhon Backington) என்பவர் கொஞ்சகாலத்திற்குமுன் ஓர் சந்தர்ப்பத்திற்சொன்ஞர்.

ரிச்சார்ட் லௌவல் எட்ஜ்வொர்த் (Richard-Lovel-Edgeworth) என்பவர் தன் அந்த்யகாலத்தில், தன் அண்டை வீட்டாருக்கு மிகவும் பிரியமுள்ளவராய் ஆனபோது, ஒருநாள் தம்மகளை நோக்கி, "மேரி (Mary)! ஜனங்கள் என்மீது பிரியம்கொண்டாடுவதைப்பற்றிப் பயமாயிருக்கிறது; சீக்கிரத்தில் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவனுகப் போகிறேன். ஜனங்களுக்கு வெகுபிரியமாயிருப்பவன் ஒன்றுக்கும் உதவான்" என்று சொன்ஞர். "சகலமான மனிதர்களும், உன்னைப்பற்றி நன்றுய்ப் பேசுங்கால் உனக்குத் துன்பம் உண்டாகுக." பொய்த்தீர்க்கதரிசிகள் விஷயத்தில், அவர்களுடைய முன்னேர்கள் அவ்வாறே செய்தனர் என்ற வெகுஜனப்பிரியனுடைய துர்ப்பாக்கியத்தைப் பற்றிய வேதவாக்கியத்தை அச்சமயம் ஞாபகத்தில் வைத்திருந்தார் போலும்.

திடஞானமானது, சுவாதீனத்திற்கும், தற்சார்பினுக்கும் முக்யமான அவசிய சாதனமாயிருக்கின்றது. ஒருமனிதன், தனக்குத் தானுகவே இருக்கும்படியான தைரியமுடையவனுதல் வேண்டும். பிறரைச் சார்பாகவாவது, பிறர் சொன்னபடியே நடப்பவனுகவாவது இருத்தல் கூடாது. தன் சொந்த சக்தியைப் பிரயோகித்து, தன் சொந்த ஆலோசனையைச் செய்து, தன் சொந்த அபிப்பிராயங்களையே வெளியிடல் வேண்டும். தன் சொந்த அபிப்பிராயங்களையே திடப்படுத்தித் தன் சொந்த அனுபவங்களையே கொள்கைப்படுத்திக் கொள்ளல் வேண்டும். தனக்குத்தானே கொள்கை உண்டாக்கிக் கொள்ளத் துணிவில்லாதவன், கோழையாயிருத்தல் வேண்டும். கொள்கையையுண்டாக்கிக் கொள்ள மனமில்லாதவன், சோம்பேறியாயிருத்தல் வேண்டும். ஒருகொள்கையை உண்டாக்கிக் கொள்ளக் கூடாதவன், மூடனுயிருக்க வேண்டும்," என்று சொல்லப்பட்டிருக்கிறன.

(இன்னும் வரும்.)

நுண்பொருண்மாலை

இல்வாழ்க்கை.

சக. "இல்வாழ்வானென்பான்."

நு—லை:—என்பான்—எனப்படுவான். "கறிபொரித்தது, சோறட்டதுபோல, "செயப்படுபொருளைச் செய்ததுபோல" (தொல், சொல்—உசஅ) என்னுஞ் சூத்திரவிதி பெற்றது. முன்னர்ப் "பேணியார் பெட்பச்செயி" னும், (திருக்-கஙறிஎ) "மாற்றேனெனவந்தகாலனை * என்னுங்கோவையாரும் (கஙo) அது. இல்—ஆகுபெயர்.

சஉ. "துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கும்."

நு—லை:—துவ்வாதவர் - வறியார். "துன்புறூஉந் துவ்வாமை" (திரு-கூச) யும் அது. "துணை" என்னும் அஃறிணைச்சொல் "என்பான் றுணை" (ஷை சக) எனவும், "அவன்கண்ணதோகின் றுணை" எனவும், "மறத்திற்கு மஃதே துணை" (ஷை. எசா) எனவும் இருதிணைக்கண்ணுநின்று மேலாக்கங்கொடுத்து, ஆவன் ஆவள் ஆவர் ஆம் என உரைபெற்றது காண்க. இனித் தலையென்பதுங் கடையென்பதும் "ஓம்பறலை" (ஷை சங) "தானஞ்செய் வாரிற் றலை" (ஷை உகூறி) "ஆதல்கடை" (ஷை கூகூஅ) என இருதிணைக்கண்ணும் நிற்கும்.

சங. "தென்புலத்தார்தெய்வம்."

நு—லை:—தெய்வம், சாதியொருமை. ஆங்கு - அசை. ஐவகையும் அறஞ்செய்தற்கிடமாகலின் ஐம்புலம் என்றார்; அரசனுக்கு ஆறிலொருபேறு இதனலறிக. இவ்வாறு, "அற்றாரழிபசி" தீர்க்கும் (திருக்-உஉக) அறம் இடமாகலின் அதனை "வைப்புழி" எனப் பொருள்கருதி நவின்றெழுதுவதுங் காண்க. (திருக்-உஉசா.)

சச. "பழியஞ்சிப்பாத்தூணுடைத்தாயின்."

---

* "ஒருவரானும் மாற்றப்படேன் என்றுவந்த காலனை" என்றுரைகூறி "மாற்றேனென்பது செயப்படுபொருட்கண் வந்த" தென்றார் பேராசிரியர்.

நு—லே:—பாத்து - பகுத்து. ஊண் - உண்டல். 'உண்டுவருதல்' போலப் பெயரெச்சம் புடைபெயர்ச்சித் தொழிற்பெயரோடு முடிந்தது; "கல்லாத மேற்கொண்டொழுகல்" (திரு-அசரு) "புறனழீஇப்பொய்த்து நகை" (ஷை க அ உ) 'ஒட்டார்பிற் சென்றுநிலை சொல்லி" என்பனவும் அவ்வாறும். வாழ்வானுடைமை வாழ்க்கைமே லேற்றப்பட்டது (என்பது) வாழ்க்கையான் உடையனுயின் என்னுமையால் எனக. பாவத்தான் வந்த பிறன்பொருளைப் பகுத்துண்ணின், அறம்பொருளுடையான் மேலும் பாவந்தன்மேலும் நிற்குமென்பது காண்க.*

சுரு. "அன்புமறனுமுடைத்தாயின்."

நு—லே:—அது - அவ்வுடைமை. "பண்பும் பயனுமது" என முன்னிற்றற்பால சுட்டுப் பின்னே நின்றது.

சசு. "அறனெனப்பட்டதே."

நு—லே:—ஏகாரம் - பிரிநிலை, பிரிக்கப்பட்டது துறவறமாகலின் அதுவென்னுஞ் சுட்டுப்பெயர் அதன் மேனின்றது.*

ருO. "வையத்துள்வாழ்வாங்கு."

நு—லே:—"நின்றுங்கிசைத்தல்" (தொல்-சொல்-ருகூ) என்பது போல, ஆங்கு-இயல்பின் பொருட்டாயிற்று.

வாழ்க்கைத் துணைநலம்.

ருக. "மனைத்தக்க மாண்புடையளாகி"

நு—லே. மாண்பு-நற்குண நற்செய்கைகள். 'மனைத்தக்கமாண்பு' 'வளத்தக்காள்' என்பன பெயரடுத்துவருதலில், தகுதிச்சொற்கு 'அதற்குத்தக' (திருக்-கூகக) என இச்செய்புளாசிரியர் நான்கனுருபினை விரித்தவாறே, இவ்வுரையாசிரியரும் விரிப்பர். இனி,

*. இந்நுண்பொருண்மாலையில், இவ்வாறு, எப்போதும் ஞாபகத்தில் வைக்கத்தக்க அரியவுரைவிஷயங்கள், பரிமேலழகர்நடைப்படியே எழுதப்பட்டிருத்தல் பலவிடத்துங் காணப்படும். இதனுல், இந்நூல், திருமேனி-இரத்தினகவிராயரால் தம் சொந்த ஆராய்ச்சிக்கு ஒரு கருவியாக எழுதிவைக்கப்பட்டதென்று தோற்றுகிறது. இவ்வாறு தம் சொந்தக்குறிப்பாக எழுதிச் செல்கின்றமையால், சிற்சிலவிடங்களில் இவ்வாசிரியர் கருத்து நன்கு விளங்க வில்லையாயினும், அறிஞர் ஆராய்ந்து கொள்ளும்படி, பிரதியிலிருந்தவாறே அவற்றைப் பதிப்பித்திருக்கிறேன். ப - ர்.

'செய்தக்க' (திருக்-சகூகூ) கோட்டக்கது (உ௨0) பெட்டக்க, (எ௩௨) நயத்தக்க, (௫அ0) இளித்தக்க, (கஉஅஅ) வெறுத்தக்க (கூகூ) என முதனிலையடுத்து வந்த வினைச்சொற்கும் இச்செய்யுளாசிரியர், "பிறர் நாணத்தக்கது, அறநாணத்தக்கது" (ஷை-க0கஅ) என விரித்தாற்போல, செயத்தக்க, கொளத்தக்க, நயக்கத்தக்கது என விரிப்பர். இனி, "இரத்தக்கார்" (ஷை க0௫க) என்பதற்கு 'இரத்தற்குத் தக்கார்' என எழுதி "தற்கு" என்னுஞ்சொல் விகாரமாயிற்றென்பது "உரைத்தக்கவற்குரைத்து" என்பதனுரைகண்டு பிறரெழுதிய கள்ளவுரை.

௫௩. "இல்லதெனில்லவண்மாண்பானல்."

ந—லை:—'மனைத்தக்க மாண்புடையளாகி' என்பதுபோல நில்லாமல், "மாண்பானல்" என நின்றமையால் குணத்தின் பெயர் குணிமேல் நின்றது. இஃது ஆகுபெயர். பின்னர் அவள் எனச் சுட்டற்பாலது இல்லவள் என முன்போல் இயற்கைப்பெயராய் நிற்பினும், அவள் எனச் சுட்டுப்பெயர்ப் பொருளே படும். இது, சுட்டொடு புணராத பொருள்படுபெயர், சுட்டுப்பெயர் சுட்டொடு புணர்பெயர், சுட்டொடு புணர்ந்த பொருள்படுபெயர் என மூவகையாம்; அவை:—" மக்கண் மெய்தீண்டல் " (கூ௫) " செல்வத்துட் செல்வம்" (சகக) "இல்லதெனில்லவள்" (௫௩) என முறையே காண்க. இன்னும், இயற்பெயரல்லாது ஒருபொருட்கிளவியும் விசேடித்த பெயர்களும் சுட்டொடு புணராத பொருள்படு பெயராம். அது, "பவ்வத்தோ டகம்புக்கு முந்நீர்மூழ்கினும்" "நற்பூங்கழலான், கற்பாடழித்த கனமாமணிப் பூண்செய் தோளான்" (சிந்தாமணி-பதிகம்-ககூ) எனவும் வரும். "பொருளொடு புணராச் சுட்டுப்பெயராயினும்" (தொல்-சொல்-௩எ) என்னுஞ் சூத்திரத்து நச்சினார்க்கினியரும் இவ்வாறமைத்தாரென்க.

௫௫. "தெய்வந்தொழாஅள்"

ந—லை: —"தொழுதெழுவாள்" என்பது, "செய்தெனெச்சத் திறந்த கால, மெய்திட னுடைத்தே வாராக் காலம்." (தொல்-சொல்-உசக) என்னுஞ் சூத்திரவிதி பெற்றுத்திரியாது, 'தொழுது' என்பது தொழாநின்று எனப்பொருள்பட்டது. " கொடியாடித்

தோன்றும்" என்பதுமது. இதனைத் தொழாநின்றென்பது தொழுதெனத் திரிந்ததென வெழுதியது பிறர்கள்ளவுரை. "தினைவளங் காத்து" என்பதில், "தொழுதெழுவார் வினைவளநீறெழ" (௧௧௮) என்னுங் கோவையாரும் அது. தெய்வந்தான் ஏவல் செய்யுமென்பது. "மழையே கொள்ளெனக் கொண்டான்" என்பது போலும் "பெய்யெனப் பெய்த" லெனக.

௫௭. "சிறைகாக்குங்காப்பெவன்."

நு—லை:—வினைப்பெயர் கொண்டது பெயரெச்சம், ஒருமைக்கட் டான்கற்ற கல்வி"(௩௬௮) "களவினலாகிய ஆக்கம்" (௨௮௩)உம் அது. "காப்பேதலை" பிரிநிலையேகாரம்.

௫௮. "பெற்றாற் பெறிற்பெறுவர்."

நு—லை:—பெண்டிர், புத்தேளிர், மகளிர், கேளிர் என 'இர்' ஈறும் வருமாதலின், பொதுப்பட "ரஃகா னொற்றும்பகர விறுதியும்" (தொல்-சொல்-எ) என்றார்: பின்னர், ஆரீறு பெரும்பான்மை வருதல்பற்றி, "அர் ஆர்' (௯-௯-௨௦௮) என்றார் தொல்காப்பியனார் என்க.

௫௯. "புகழ்புரிந்தில்லிலோர்க்கு."

நு—லை:—புரிந்த என்னும் பெயரெச்சத்தீறு குறைந்தது. "தொண்டினமேவும்" என்னுங் கோவையாருள் (௩0௨) "கண்டினமேவுமில்" என்பதும் அது. செயுமென்னெசசத் தீற்றுமிசையுகர மெய் கெடுதற்கு விதியன்றி, செய்தவென்னெச்சம் உயிராதல் ஒற்றுதல் கெடுதற்கு விதியின்மையாற் குறைந்து நின்றதென விகாரமாக்கினரென்க. சிங்கவேறு புருடநடைக்கு உவமையாயிற்று:

௬௦. "மங்கலமென்பமனைமாட்சி."

நு—லை:—முதல் நன்மை (யொடுகூடிய) அறிந்தோர் என்பதனைத் தோன்றாவெழுவாய் என்றார். இனி, முன்னர், "மிகச்செய்து தம்மெள்ளுவாரை" "பகையென்னும் பண்பிலதனை" என்பவற்றுள், பாற்று' எனவரும் வினைக்குறிப்புமுற்றுக்கேற்ப நூல் முதலியவற்றை வருவித்தெழுதி 'அவாய் நிலையான் வந்தது' என்றார். ஆதலால், தோன்றா எழுவாய் சொல்லெச்சம் எனப்பெயரிட்டு இலக்கணநூற்கு உரையாசிரியர் முதலாயினார் எழுதிய வாய்பாட்டான் எழுதினரேனும், இவ்வுரையாசிரியர்க்கு அவாய் நிலையான் வந்த (தென்ப) தே கருத்தென்க. "மீக்கூறுமன்னனிலம்" (திருக்-௩௮௬) "உருவுகண்டெள்ளாமை வேண்டும்" (௯-௬௬௭) என்பனவும் அது. 'அதன்' எனச்சுட்டியதை அவையென்றுரைத்தார்; மாட்சி-நற்குண நற்செய்கையெனப் பன்மையாக்கி இவ்வாறுரைத்தார்.

(தொடரும்)